# பலரோடு சென்ற படகு 2 பிணத்தோடு திரும்பியது


Registred as a News Papar in Ceylon விலைசதம் 15 ★ ★

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம்
— ரூ 18-00
ஆறு மாதம்
— ரூ 34-00
ஒரு வருடம்
ரூ. 66-00

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 12
இதழ்: 21
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
வாரப் பதிப்பு
மூன்று மாதம்
— ரூ. 4-00
ஆறு மாதம்
— ரூ. 7-50
ஒரு வருடம்
— ரூ. 14-00
முற் பணம்
கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம்
அனுப்பப்படும்.

யாழ்ப்பாணம் மாசி 21 ஜுல்ஹஜ் 25 புதன்கிழமை [4-3-70]


# இதுவரை 54 சடலம் மீட்பு
# நேற்று 5 சடலம் கிடைத்தன

யாழ்ப்பாணம் புதன்

**பாலைதீவு படகுவிபத்தில் சிக்கி மரணமானவர்களின் மேலும் 5 சடலங்கள் நேற்று பிற்பகல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவர்களின் இரு சடலங்கள் அடையாளம் காட்டப்பட்டு, உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. மன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்குமிடையில் கடலில் மிதந்துகொண்டிருந்த 3 சடலங்களை பொலிசாரும் சுங்கப் பகுதியினரும் நேற்று குருநகர் இறங்கு துறைக்குகொண்டுவந்து சேர்த்தனர் மிகுதி இரண்டு சடலங்களும் விபத்துக்குள்ளான படகுக்குள் இருந்து மீட்கப்பட்டன.**

நேற்று கண்டுபிடிக்கப்பட்ட 5சடலங்களுடன் இதுவரை 54 சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. நற்று அடையாளம் காட்டப்பட்ட யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியைச் சேர்ந்த கார்த்திகேசு சிவராசா (வயது 30), பெரியவிளான் மகேஸ்வரி தேவராசா (வயது 27) ஆகியோரின் சடலங்கள் குருநகர் இறங்கு துறையில் நடைபெற்ற மரணவிசாரணையின்பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ் இராசநாயகம் மரண விசாரணை நடத்தினர்

## இராமேஸ்வரக்கடலில் 3 சடலங்கள்

நேற்று தேடுதல் முயற்சியில் ஈடுபட்டு மன்னார்-இராமேஸ்வரம் கடலில் சென்றுகொண்டிருந்த பொலிஸ், சுங்க இலாகா கோஷ்டி இராமேஸ்வரத்துக்கு அண்மையில் கச்சதீவுக்கு 3 மைல் அப்பால் மிதந்துகொண்டிருந்த 3 சடலங்களைக் கண்டெடுத்தது. காற்சட்டை அணிந்த இரு ஆண்களையும் அடையாளம் காட்டப்பட்ட மகேஸ்வரி என்னும் பெண்ணையும் மீட்டனர்.

## விபத்துப்படகு மீட்கப்பட்டது அதனுள் 2 சடலம் கண்டுபிடிப்பு

விபத்துக்குள்ளான 'ராஜயோகம்' என்ற படகை பொலிஸாரின் தலைமையில் சென்ற கரையூரைச் சேர்ந்த 50க்குமதிகமான பொதுமக்கள் கோஷ்டிஒன்று நேற்று கடலிலிருந்து மீட்டது. சுக்கான உடைந்த நிலையில் இருந்த படகினுள் இரண்டு சடலங்களையும் அவர்கள் கண்டுபிடித்தனர். இவை என்ஜின் பொருத்தப்பட்ட அறைக்குள் சிக்குண்டு இருந்து மீட்கப்பட்டது. காற்சட்டை அணிந்த இவ்விரு சடலங்களும் அடையாளம் காணமுடியாமல் சிதைந்த நிலையில் இருந்தன.

### சடலத்தில் நகைகள்

மீட்கப்பட்ட 5 சடலங்களும் சிதைந்தநிலையிலேயே காணப்பட்டன. அடையாளம் காட்டப்பட்ட பெண்ணின் சடலத்தில் தாலிக்கொடி, தங்கச் சங்கிலியில் பொருத்தப்பட்ட கைக்கடிகாரம், காப்பு முதலியன இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

அடையாளம் காட்டப்படாத சடலங்களின் விபரம் பற்றி புகார்செய்த உறவினனர்களுக்கு நேற்றிரவே தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் திரு, மாணிக்கம் அறிவித்தார். இன்று மாலை வரை மீட்கப்படாத சடலங்கள் அரசாங்க செலவில் அடக்கம் செய்யவேண்டிய நிலை ஏற்படும் என்றும், சடலங்களை வைத்திருக்கமுடியாதநிலையில் இருப்பதாகவும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. கார்த்திகேசு கூறினர். (தே நி)

பாலைதீவுக்குச் சென்று திரும்பாதவர்களின் விபரம் பற்றி பொலிசில் புகார்செய்யப்பட்டுள்ளது. நேற்றுவரை 11 பேர் பற்றி புகார் தெரிவிக்கப்பட்டிருந்தது. அவர்களில் இருசடலங்கள் நேற்று மீட்கப்பட்டு அடையாளம் காட்டப்பட்டு ஒப்படைக்கப்பட்டன.

### செனட்டில் படகு விபத்து பிரஸ்தாபம்

கொழும்பு, செவ்வாய்

செனட்சபையில் இன்று பாலைதீவு படகுவிபத்து பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டது செனட்டர் நடராசா படகுவிபத்தினுல் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் நிதி வழங்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார் செனட்டர் திருச்செல்வம் பேசுகையில் வடபகுதியில் அடிக்கடி ஏற்பட்டுவரும் படகுவிபத்துக்கள் பற்றி விசாரணை செய்ய கமிஷன் ஒன்று நியமிக்கப்படவேண்டுமென்ருர் நீதியமைச்சர் திரு விஜயமானே பதிலளித்துப் பேசுகையில் நிவாரணம் வழங்குவதற்கு தாம் சிபார்சு செய்வதாக உறுதியளித்தார்

# கச்சதீவுக்குச் செல்ல அனைவருக்கும் வாய்ப்பில்லை

## 'லைசன்ஸ்' பெற்றபடகுகள் இரண்டுதான் உள்ளனவாம்

யாழ்ப்பாணம், புதன்

**இன்று ஆரம்பமாகவிருக்கும் கசசதீவு புனித அந்தோனியார் திருநாளில் கலந்துகொள்ள விரும்பும் அத்தனை யாத்திரிகர்களும் யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள அரசாங்கம் அனுமதியளித்திருக்கின்ற ஒன்பது இறங்கு துறைகளிலிருந்தும் செல்ல முடியுமா? இந்தக் கேள்விக்கு நிசசயமாகப் பதில் சொல்லக் கூடிய நிலையில்யாரும் இல்லை.**

பாலைதீவுப் படகு விபத்தில் பலர் மாண்டதைத் தொடர்ந்து கச்சதீவுப் பிரயாணிகளின் நலனைக் கருதி யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. பிரான்சிஸ் பீட்டர்ஸ் பொலிஸ் மற்றும் அரசாங்க அதிகாரிகளை அழைத்து ஆலோசனை செய்த பின் சில நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்

இதன்படி பிரயாணிகளை ஏற்றிச் செல்வதற்கென 'லைசன்ஸ்' பெற்ற பிரயாணப் படகுகளே கச்சதீவுக்குப் பிரயாணிகளை ஏற்றிச் செல்ல அனுமதிக்கப்படும். யாழ்ப்பாண மாவட்டத்தில் பிரயாணப்படகுகளின் தொகை மிகக் குறைவு இருக்கும் படகுகளிலும் 'லைசன்ஸ்' பெற்ற படகுகளின் தொகையும் குறைவு. இதிலும் இந்தவருடம் 'லைசன்ஸ்' புதுப்பித்த பிரயாணப் படகுகள் [illegible] இந்நிலையில் [illegible] டும் கச்சதீவுக்கு எத்தனை யாத்திரிகர் எந்தத் துறைகளிலிருந்து செல்ல முடியும?

இதற்கிடையில் படகுகளின் 'லைசன்ஸ்'களைப் புதுப்பிக்கவும் புதிய படகுகளுக்கு 'லைசன்ஸ்கள்' வழங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன.

## "தமிழ், இந்து, விஞ்ஞான பல்கலைக்கழகம் வேண்டும்"

யாழ்ப்பாணம், புதன்

"தமிழும் இந்து தர்மமும் இருதுறைகளாகக் கொண்டு ஏனைய சமய தத்துவங்களும் பிற மொழிகளையும் சேர்த்துக் கற்கக்கூடிய வாய்ப்பு வசதி கொண்ட பல்கலைக்கழகம் உருவாக்கப்பட வேண்டும்" இவ்வாறு திரு. வ. பொன்னம்பலம் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி ஜி. ஸி. ஈ. வகுப்பு மாணவர் மன்றககூட்டத்தில் 'தமிழ்ப் பகுதியில் பல்கலைக்கழகம்' என்ற பொருள்பற்றி விரிவுரைநிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

திரு பொன்னம்பலம் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

வடக்கில் பல்கலைக்கழகம் வேண்டும் என்பது பசித்தவனுக்கு உணவு வேண்டும் என்பது போன்றது. இடக்கில் பல்கலைக்கழகம் நிறுவ வேண்டும் என்பது பால் [illegible]

கழகங்களும் ஓர் அங்கப் பல்கலைக் கழகங்களாகவும், இணைப்பு பல்கலைக்கழகங்களாகவும் உருவாக்கிவிடுவது நன்று என்று கருதினுல் இலங்கைப் பல்கலைக்கழகம் என்ற பெயரிலேயே இதுவரையுள்ள பல்கலைக்கழகங்களையும் இனிமேல் அமையவேண்டியவற்றையும் சட்டங்களை இயற்றி இணைக்கலாம். இங்கிலாந்தில் ஒக்ஸ்பேட், கேம்பிரிஜ், இந்தியாவில் சென்னை ஆகிய பல்கலைக்கழகங்கள் பல கல்லூரிகளை இணைத்து இயங்கி வருகின்றன. தமிழ் மக்களின் முன்னேற்றத்துக்கு விஞ்ஞான, மருத்துவ தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் பயிற்சி பாண்டித்தியம் தரக்கூடிய பல்கலைக்கழகம் ஒன்று அமைய வேண்டும். இது முழுமை நிறைந்ததாக அமைவது அவசியம்.

## கச்சதீவில் 'கஜபாகு'

யாழ்ப்பாணம், புதன்

இலங்கை கடற்படை கப்பலான 'கஜபாகு' [illegible]று கப்பல், கொழும்பு செல்லுமென்றும், கடற்படையைச் சேர்ந்த ஒருவர் தெரிவித் [illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யதாவது:-

வடக்கில் பல்கலைக்கழகம் வேண்டும் என்பது பசித்தவனுக்கு உணவு வேண்டும் என்பது போன்றது. இங்கில் பல்கலைக்கழகம் நிறுவ வேண்டும் என்பது பால் பருகும் பாலகனுக்கு பல ஆண்டு செல்ல சோறு கொடுக்க வேண்டும் என்று இப்போதே முடிவு எடுப்பதற்கு சமமாகும். பல்கலைக்

கழகங்கள் ஓர் அங்கமாகவும், இணைப்பு உள்ளதாகவும் விளங்குகின்றன. இலங்கையில் எல்லாப் பல்கலைக்

தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் பயிற்சி பாண்டித்தியம் தரக்கூடிய பல்கலைக்கழகம் ஒன்று அமைய வேண்டும். இது முழுமை நிறைந்ததாக அமைவது அவசியம்.

இந்துப் பபல்கலைக்கழகம் என்றும் தமிழ்ப்பல்கலைக் கழகம் என்றும் கேட்பவர்கள் கூட தனியே குருமாரைப் பயிற்றுவிக்கவோ, பண்டிதர்களை உற்பத்தி செய்யவோ பல்கலைக்கழகங்களைக் கோரவில்லை என்பது தெளிவு. (மல். நிரு.)

அழைத்து ஆலோசனை செய்த பின் சில நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்

இதன்படி பிரயாணிகளை ஏற்றிச் செல்வதற்கென 'லைசன்ஸ்' பெற்ற பிரயா

...தொகையும் குறைவு. இதிலும் இந்தவருடம் 'லைசன்ஸ்' புதுப்பித்த பிரயாணப் படகுகள் இரண்டுதானும். இந்நிலையில் படகுகளில் மட்டும் கச்சதீவுக்கு எத்தனை

வடபகுதி அசைஸ் விசாரணை

# எதிரிக்கு நான்கு வருட கடுழிய சிறை

யாழ்ப்பாணம், புதன்

மிருசுவில் கொலை முயற்சி வழக்கில் எதிரிக்கு 4 வருட கடுழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது ஜூரிசபையினர் ஏகமனதாக எதிரி கைமோசக்கொலை முயற்சி குற்றவாளியென தெரிவித்ததைத் தொடர்ந்து நீதியரசர் தீர்ப்பு வழங்கினர்.

இவ்வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஜி. ஈ வீரமந்திரி முன்னிலையில் கடந்த 3 தினங்களாகவிசாரணை செய்யப்பட்டு நேற்றுக் காலை தீர்ப்பு வழங்கப்பட்டது.

இவ்வழக்கில் மிருசுவிலில் 69-ம் ஆண்டு மார்ச் மாதம் 18-ம்தேதி சி. சின்னத்தம்பி என்பவர், நவரத்தினம் என்பவரை கொலைசெய்ய முயற்சித்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிக்காக அட்வகேட் எம். மோதிலர்ல்நேரு, புறக்டர் வி. ஆனந்தசங்கரியின் உதவியுடன் ஆஜராணுர் முடிக்குரிய தரப்பில் அட்வகேட் எல். டி. குருசாமி ஆஜராணுர்.

அசைஸ் விசாரணை இன்று காலை தொடர்ந்து நடைபெறும்.

பாலைதீவு விபத்தும்

## தீவுப்பகுதி மக்களின் போக்குவரத்து கஷ்டமும் ஆட்சிமன்றத்தில் பிரஸ்தாபிக்கப்படும்

யாழ்ப்பாணம், புதன்

பாலைதீவு படகு விபத்து குறித்து பகிரங்கவிசாரணைக் கமிட்டி நிறுவ அரசாங்கத்தைக்கோரும் பிரேரணையை பாராளுமன்றத்தில் தமிழரசுக் கட்சி எம். பி. க்கள் சார்பில் கொண்டுவரப் போவதாக சாவகச்சேரி எம். பி. திரு. வ. ந. நவரத்தினம் தெரிவித்தார். திரு. நவரத்தினம் எதிர்வரும் 9-ந் திகதி கூடவிருக்கும் பாராளுமன்ற கூட்டத்தொடரில் இபபடகு விபத்துப் பற்றிப் பிரஸ்தாபிக்கவிருக்கின்ருர்.

படகு விபத்து குறித்து பிரஸ்தாபிக்கவுள்ள இவர் தற்போது தீவுப்பகுதிமக்கள் அனுபவித்துவரும் போக்குவரத்து, பிரயாணக் கஷ்டங்கள் குறித்தும் போக்குவரத்து மந்திரியிடம் சுட்டிக் காட்டி உடனடியாக குறைபாடுகளைப் போக்குமாறு கோரிக்கை விடுக்கவிருக்கின்ருர்.

சுமார் 30 ஆண்டுகளுக்கு மேலாக கூட்டுறவுச் சங்கங்களால் நடாத்தப்பட்டுவரும் தீவுப்பகுதி படகு சேவையை அரசாங்கம் பொறுப்பேற்று நல்ல முறையிலான சேவை வழங்க வேண்டும் என்ற இப்பகுதி மக்களின் கோரிக்கை இவ் விபத்து இடம்பெற்றதன் பின்னர் மிக நியாயமானதாகவும், அத்தியாவசியமாகவும் செய்யப்படவேண்டும் என ஆட்சிமன்றத்தில் வற்புறுத்தப் போவதாகவும் திரு. நவரத்தினம் மேலும் தெரிவித்தார். (மல்லா நிரு

# "ஈழநாடு" ஆதரவில்

# பாலைதீவு விபத்து நிவாரண நிதி

நெஞ்சத்தைக் கசக்கிப் பிழியும் பாலைதீவுக்கடலின் கொடுமைக்கு இரையானவர்களின் குடும்பங்கள் செய்வதறியாது பரிதவிக்கின்றன! ஆற்ருெண்ணுத் துயரத்தால் துடிதுடித்துக்கொண்டிருக்கும் அவர்கள் கதறல் ஒலி உங்கள் காதுகளில் கேட்காமல் இருக்க மாட்டாது!

ஈவிரக்கமின்றி இயற்கையின் சீற்றத்துக்கு பலியான அந்தப் பரிதாபக் கதையை கேட்டவர்கள், படித்தவர்கள் எல்லாருமே கண்ணீர் விட்டு அழுதார்கள்! நினைத்துக்கூடப் பார்க்கமுடியாத அந்தக் கோரச் சம்பவத்தை கேட்டுக்கொண்டு எப்படிச் சும்மா இருக்க முடியும்?

தலைவர்களை இழந்து தஞ்சமின்றித் தவியாய்த் தவிக்கும் நம்மவர்களுக்கு நம்மாலானதைச் செய்யவேண்டியது நம்மவர் கடமையாகும்!

துடிதுடிக்கும் அந்தப் பரிதாபத்துக்குரியவர்களுக்கு நீங்களும் ஏதாவது செய்யவேண்டுமெனத் துடியாய்த் துடிப்பதும் எங்களுக்குத் தெரிகிறது!

அந்த எளிய குடும்பங்களுக்கு உங்களாலானதைச் செய்ய உங்களுக்கு ஒரு சந்தர்ப்பம்! பாலைதீவுக்கடலுக்கு தம்மவர்களைப் பலிகொடுத்த வேதனையால் கதறியழுது, கண்ணீர் வடித்து துயரக்கடலில் அமிழ்ந்து போயிருக்கும் குடும்பங்களுக்கு நிதிஉதவி வழங்க 'ஈழநாடு' ஒரு கஷ்ட நிவாரண நிதியை ஆரம்பித்துள்ளது. இதற்காகநியமிக்கப்பெற்றுள்ள ஒரு விசேஷ குழுவுக்கு யாழ்ப்பாண அரசாங்க அதிபர் எவ். ஸி. பீட்டர்ஸ், தலைவராகவும் வண. பிதா மதுரநாயகம் செயலாளராகவும், டாக்டர் கே. கனகரத்தினம், வடபகுதிபொலிஸ்அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் 'ஈழநாடு' நிர்வாக ஆசிரியர் கே. பி. ஹரன் ஆகியோர் அங்கத்தவர்களாகவும் கடமையாற்றுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி இலங்கையில் சூருவளி, வெள்ளம் போன்று பெரு விபத்துக்கள் ஏற்பட்டபோது, 'ஈழநாடு' முன்வந்து நிதி திரட்டி, கஷ்ட நிவாரணத்தில் ஈடுபட்டு அவற்றினுல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி புரிந்தது அன்பர்கள் அறிந்ததே.

சமீப சரித்திரத்தில் ஏற்பட்டிராத இந்தப் படகு விபத்தினுல் தலைவர்களை இழந்து பாதிக்கப்பட்டிருக்கும் குடும்பங்களுக்கு உதவி அளிக்க அன்பர்கள் பலரும் தாராளமாக முன்வருவது நம்பிக்கை.

**'பாலைதீவு விபத்து நிவாரணநிதி', 'ஈழநாடு' யாழ்ப்பாணம்** என்ற விலாசத்துக்கு உங்கள்உதவிகளை அனுப்பிவைக்க வேண்டுகிருேம்.

### உதவி வழங்கியோா:

| | |
|---|---|
| 'ஈழநாடு' நிறுவனம் | ரூ. 500-00 |
| கொழும்பு ஸ்ரீகிருஷ்ணகாப்பரேஷன் லிமிட்டெட் நிர்வாக டைரக்டர் சே. செல்வநாதன் மூலமாக | ரூ. 1000-00 |
| க. தேவதாசன் [நற்குணம்] (யாழ் ஐ வி சக்கம்) | ரூ. 10-00 |
| டாக்டர் எஸ். பாக்கியநாதர் அத்தனுசியார் ஜே. பி. சில்லாலை-பண்டத்தரிப்பு. | ரூ 25-00 |

# கச்சதீவில் 'கஜபாகு'

யாழ்ப்பாணம், புதன்

இலங்கை கடற்படை கப்பலான 'கஜபாகு' நேற்று முன்தினம் கொழும்பிலிருந்து கச்சதீவுக்கு வந்துள்ளது இக்கப்பலில் கடற்படையை சேர்ந்த 160 பேர் வந்துள்ளனர்.

இம்மாதம் 9-ம்தேதிவரை கஜபாகு கச்சதீவிற்கருகில் நிற்குமெனவும் கச்சதீவிலிருந்துசகல யாத்திரிகர்களும் வெளியேறியபின்தான் இக் கப்பல், கொழும்பு செல்லுமென்றும், கடற்படையைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார்.

கஜபாகுவுடன், காரைநகரைச்சேர்ந்த கடற்படை படகுகளும் நேற்று கச்சதீவுக்கு சென்றுள்ளன.

கச்சதீவு பெருநாள் முடியும்வரை கடற்படை வீரர்கள் கப்பலில் தங்கியிருப்பார்கள்.

## "எதையும் பொலிசார் மீதுதான் சுமத்துவதா?"

யாழ்ப்பாணம், புதன்

'ஊடுக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி' என்பதைப்போல் எந்த விபத்தோ, என்ன அழிவோ ஏற்பட்டாலும் அந்தப்பழியைப் பொலிசார் தலைமையில் சுமத்துவது வழக்கமாகிவிட்டது. இதனுல்தான் சில பொறுப்புள்ள பெரிய மனிதர்களும்கூட பொறுப்பற்ற முறையில் பாலைதீவுப் படகு விபத்தில் பலர் மாண்டதற்குப் பொலிசாரின் கவனக் குறைவு காரணம் என்று குற்றம்சாட்டுகின்றனர்.

இவ்வாறு வடபகுதிப் பொலிஸ் உயர்தர அதிகாரி 'ஈழநாடு' பிரதிநிதியிடம் தெரிவித்தார்.

பாலைதீவுக்குப் பிரயாணிகளை ஏற்றிச்சென்ற படகுகளில் அளவுக்கதிகமாகப் பிரயாணிகளை ஏற்ருமல் பொலிசார் தடுத்திருந்தால் அந்த துரதிர்ஷ்ட விபத்தில் இத்தனை அப்பாவி உயிர்கள் மாண்டிருக்கவேண்டிய நிர்ப்பந்தம்ஏற்பட்டிருக்காதென யாழ். நகர மேயரும் மற்றும் சிலரும் கருத்துத்தெரிவித்திருப்பது பற்றி அபிப்பிராயம் தெரிவிக்கையிலேயே அந்த அதிகாரி மேற்கண்டவாறு சொன்னுர் அவர் மேலும் கூறியதாவது:

சமீபத்தில் ஒருவரின் தலைமீது தேங்காய் ஒன்றுவிழுந்தபோது, அந்தத் தேங்காய் விழுந்த தென்னை மரத்திற்குச் சொந்தக்காரரான அடுத்த வீட்டுக்காரரை ஏன் முன்னரே எச்சரித்துத்தேங்காய் பிடுங்குவிக்கவில்லையென்று பொலிஸார் மீது குற்றத்தைச் சுமத்தமுயன்ற ஒரு சம்பவத்தையும் சுட்டிக்காட்டவிரும்புகிறேன். என்று அந்த அதிகாரி சொன்னுர்.

— —

### படம் பார்த்தவர் மயங்கி விழுந்தார்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்தி லுள்ள ஒரு தியேட்டரில் படம் பார்த்துக் கொண்டிருந்த ஒருவர் நேற்று முன்தினமிரவு மயங்கி விழுந்தார். 'கெல்கா' என்ற ஆங்கிலப் படத்தில் பிரசவக் காட்சியை பார்த்துக்கொண்டிருந்த போதே இவர் மயக்கமுற்ருர். இவருக்கு உடனடியாக அவசர சிகிச்சை அளிக்கப்பட்டது.

காணப்பட்டன. அடையாளம் காட்டப்பட்ட பெண்ணின் சடலத்தில் தாலிக்கொடி, தங்கச் சங்கிலியில் பொருத்தப்பட்ட கைக்கடிகாரம், காப்பு முதலியன ... விக்கப்பட்டிருந்தது. அவர்களில் இருசடலங்கள் நேற்று மீட்கப்பட்டு அடையாளம் காட்டப்பட்டு ஒப்படைக்கப்பட்டன.

## காணுமற்போனவர்கள் பற்றிய விபரம்

சரவணமுத்து தேவராசா, வேலணை மேற்கு, கனகரத்தினம் சுப்பிரமணியம், சித்தன்குறிச்சி, பூநகரி. ராஜதுரைபூபதி, அரியாலை மேற்கு, ரத்தினசபாபதி தில்லைநாதன், மாரியன்கூடல் வேலுப்பிள்ளை செட்டி, கொழுமபுத்துறை, அன்ரனி பெர்ணுட் பாணம்கோட்டை நாகேந்திரராசா மாரிமுத்து செட்டி மன்னுர் (வயது 17) மகேஸ்வரிமாரிமுத்துசெட்டி (வயது 49 மன்னுர் பி, தில்லையம்பலம் மாரிசன்கூடல்.

### படகுபொலிஸ் காவலில்

விபத்துக்குள்ளாகி மீட்கப்பட்ட படகு பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது. துறைமுகக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த 'மறைன் என்ஜினியரின் பரிசோதனைக்காக வள்ளம் தொடர்ந்து பொலிஸ் பாதுகாப்பில்வைக்கப்படும்என்று தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. மாணிக்கம் தெரிவித்தார்.

— —

## மந்திரி திறந்துவைப்பார்


இமையாணன். செவ்.

சுகாதார மந்திரி திரு. ஈ. எல் சேனநாயக்கா இம்மாதம் 21ந் திகதி சனிக்கிழமை வல்வெட்டித்துறைக்கு விஜயஞ்செய்யவிருக்கிருர்.

வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலையின் புதிய கட்டிடமொன்றை அவர் அன்று மாலை திறந்து வைப்பார்.

நிர்வாகப் பகுதிக்கெனக் கட்டப்பட்ட இக்கட்டிடத்தில் மருந்துச்சாலை, காரியாலய அலுவலகம், வெளி நோயாளர்களைப் பார்வையிடுதல் முதலிய காரியங்கள் நடைபெறும்.

# படகுவிபத்தில் பலியானவர்கள் வீட்டுக்கு ஜே. ஆர். போகிருர்



யாழ்ப்பாணம், புதன்

பாலைதீவு படகு விபத்து சம்பந்தமாக நிலைமையை நேரில் பார்வையிடராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனு இன்று நண்பகல் 1-30 மணிக்கு ஹெலிகோப்டர் விமானத்தில் யாழ்ப்பாணம் விளையாட்டரங்கில் வந்து இறங்குவார். அரசாங்கஅதிபர் திரு பீட்டர்ஸ், யாழ் மேயர் திரு ரி எஸ் துரைராசா மற்றும் கரையோரப்பகுதி மாநகர சபை உறுப்பினர்களும் மந்திரியை வரவேற்பார்கள்.

பாலைதீவு படகுவிபத்தில் பலியான குடும்பங்களுக்கு அரசாங்கம் நஷ்ட ஈடு வழங்க வேண்டுமென மேயர் திரு துரைராசா இன்று ராஜாங்க மந்திரியிடம்கோருவார்என்றும்தெரிகிறது

இளவாலை, செட்டித்தெரு வேலணை, மாட்டின் ரோட் ஆகிய இடங்களுக்கு நேரில் சென்று, விபத்தினுல் அதிகம் பாதிக்கப்பட்டகுடும்பங்களிடம் நேரில்சென்றுராஜாங்க அமைச்சர் இன்று ஆறுதல் கூறுவார் இன்றுமாலை யாழ்ப்பாணம்செயலகத்தில் உயர் அதிகாரிகள் மாநாடு ஒன்றையும் அமைச்சர்கூட்டுகிருர். விபத்துக்குள்ளான குடும்பங்ளுக்கு அளிக்கப்படவேண்டிய உதவிகள்பற்றி இந்த மாநாட்டில் ஆராயப்படும்.

— —

### மாநகரசபையில் நிவாரணநிதி

யாழ்ப்பாணம், புதன்

பாலைதீவு படகுவிபத்தில் பலியானவர்களுக்கு அனுதாபம் தெரிவிப்பதற்காகவும் அக்குடும்பங்களுக்கென ஒரு நிவாரண நிதியொன்று ஆரம்பிப்பதுபற்றி தீர்மானிப்பதற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை இம்மாதம் 13-ம்தேதி கூடுகிறது,

டாக்டர் ஏ. எல். ஏபிரகாமும் மற்றும் 6 உறுப்பினர்களும் இதற்கான பிரேரணையை கொண்டு வருவதற்கு ஒரு விசேஷ கூட்டத்தைகூட்டும்படி நேற்று முன்தினம் மேயரிடம் கோரியதை தொடர்ந்து இந்த விசேஷ கூட்டம் கூடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

4 1/2 பரப்புக் காணி கல்வீடு, கிணறு சகல வசதிகளுடன் விற்பனைக்குண்டு. வருமானங்கள் உள்ளது. விபரங்களுக்கு: ஞா: வரப்பிரகாசம் (செல்லையா மேசன்), 23/4, ஆனந்தன், வடலி வீதி, 1-ம் ஒழுங்கை, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். 1893

காணி:

யாழ்ப்பாண நகரில் நல்லூர் கந்தசுவாமி கோவில் வடக்கு வீதியில் 3 பரப்பு காணியும் வீடும் விற்பனைக்குண்டு. நேரில் வரவும். அ. சோமசுந்தரம், 174, கோவில்வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம். 1896

காணி:

அரியாலை 52/3, ஆனந்தன் வடலி 1-ம் ஒழுங்கையில் 3 1/2 பரப்பு, கிணற்று வசதியுடன், செழிப்பான காணி விற்பனைக்கு. பரப்பு 4000 ரூபா. விலை கோரலாம். 416, நாவலர் ரோட், யாழ்ப்பாணம். 1894


## ஒன்பது பாடசாலைகள் பங்குபற்றின

ஒட்டுசுட்டான், செவ்.

'மாணவ மாணவிகள் தனித்துப் புத்தகப்படிப்பில் மட்டும் கவனம் செலுத்தாது தமது உடல் - உள்ள வளர்ச்சிக்கு ஏற்ற விளையாட்டுப் போட்டிகளில் ஈடுபடுவார் களேயானால் தங்கள் எதிர்கால வாழ்க்கையையும் தொழிலையும் சிறந்த முறையில் அமைத்துக் கொள்ள முடியும்.' இவ்வாறு வட்டாரப் பாடசாலை விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஒட்டுசுட்டான் கிராமசபைத் தலைவர் திரு சி. உ. சிவராசா தமதுரையில் குறிப்பிட்டார்.

இவ் விழாவில் வட்டாரக் கல்வி வித்தியாதிபதி திரு அருளையா திரு க. சச்சிதானந்தசிவம் ஆகியோர் உரைநிகழ்த்தினர். ஒன்பது பாடசாலைகள் பங்கு கொண்ட இப் போட்டியில் கற்சிலைமடு, மாங்குளம், ஒட்டுசுட்டான் ஆகியமூன்று பாடசாலைகளும் வெற்றியீட்டின.


## விசேட வகுப்புகள்

### மகளிருக்கு மட்டும்

பாடங்கள்:- (அ) ஆங்கிலம்.

(ஆ) தூயகணிதம்.

காலம்:- யோயாதின முற்பகல்.

இடம்:- உடுவில் மகளிர் கல்லூரி.

கனிஷ்ட வகுப்புகள்:- மாதம் ரூபா 10/-

(Grades 6, 7, 8)

சிரேஷ்ட வகுப்புகள்:- மாதம் ரூபா 15/-

(G. C. E O/L)

உங்கள் விண்ணப்பங்களை கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

பதிவாளர்,
மகளிர் கலைமன்றம்,
உடுவில் மகளிர் கல்லூரி,
1973 உடுவில்.

## காணவில்லை

துன்னாலை தெற்கைச் சேர்ந்தவரும் தற்போது கிளிநொச்சி 5-ம் வாய்க்காலில் இருப்பவரும் கிளிநொச்சி நீர்ப்பாசனஇலாகாவில் கடமையாற்றும் செல்லையா நாகலிங்கம் என்பவரின் மகன் இராசு என்றழைக்கப்படும் வாலிபன் திருக்கோணமலையில் படிக்கச் சென்று இருந்தார். தற்போது கடந்த மூன்று கிழமைகளாக அவரைக் காணவில்லை. தயவு செய்து அவரைக் கண்டுபிடிப்பவர்கள் கிட்டிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு அறிவித்து அவரைப் பிடித்து ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன். அவர் ஓர் அங்கம் குறைந்தவர். வயது 16 இருக்கும். நிறம் சிவலை. தகவல் தருபவர் ஈழநாடு விற்பனையாளர், கலிகைச்சந்தி. 1901

## அந்தியேட்டி அழைப்பு

எனது அருமைக் கணவர் (இளைப்பாறிய கூட்டுவு உதவி ஆணையாளரும், முன்னாள் நெல்லியடி பட்டின சபைத்தலைவருமாகிய) திரு. வே. சு. பொன்னையா அவர்களின் அந்தியேட்டி வைபவம் நிகழும் 5-3-70 வியாழக்கிழமை காலை 9 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன். திருமதி பொன்னையா, 'விதானை வளவு' நெல்லியடி கரவெட்டி. 1974

AVAILABLE

New house with electricity bus halts, Post-office near 25, Swamiar road, Columbuthurai, Jaffna. 1899


## பஸ் பிரயாணிகள் திருப்தி

பருத்தித்துறை, செவ்.

ஏற்கனவே பருத்தித்துறை இ. போ. ச. பஸ் டிப்போவில் நல்ல நிலையில் இருக்கும் 46 பஸ் வண்டிகளை விட மேலதிக பஸ் வண்டிகளும் இங்கு அனுப்பப் படவுள்ளதாகத் தெரிகிறது இப்பொழுது இப்பகுதியிலுள்ள வீதிகளில் சிறந்த பஸ் சேவை நடப்பது பற்றிப் பிரயாணிகள் பாராட்டுகின்றனர். பஸ் ஊழியரும் இந்நிலையில் திருப்தியுற்றிருப்பதாகத் தெரிகிறது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### புதன் 4—3—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-20 சைவநற் சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நிலையஒலிப் பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதங்கள், 8-30 செய்திச் சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 சித்திர கானம், 1-00 மாதர் கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச் சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 சிறுவர் விருந்து.

இரவு 6-10 முத்திநெறி, 6-30 கிராமசஞ்சிகை 7-00 செய்திச் சுருக்கம், 7-03 கிராமசஞ்சிகை, 7-15 சித்திரம், 7-45 வாத்திய இசை, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30கதாப்பிரசங்கம், 10-30 செய்திச்சுருக்கம்.


## வெஸ்லி சினிமா

மானிப்பாய்

தினசரி: 6-30, 9-30

பிரிபோயா, போயா 2-30மணி

எம். ஜி. ஆர். - சரோஜாதேவி

நடித்த

## அடகு நகை ஏலவிற்பனை

கொச்சிக்கடை மெயின் வீதி 81-ம் இலக்கக் கடையில் நகை அடைவு பிடிக்கும் ராஜா பவுண் புரோக்கேஸ் உரிமையாளர் திருமதி க. கணேசபாக்கியம் அவர்களிடம் 1 11-1966 முதல் 31-8-1968 முடிய அடைவு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் மேற்படி கடையில் 27-3-70 வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

வ. மு நாகேந்திரம், கோட் கொமிஷனர், விலை மதிப்பாளர், ஏலதாரர், இல 43, லோவர் வீதி, பதுளை.

25-2-1970 1968

## கரைச்சி கிராமசபை- பரந்தன் கேள்வி விளம்பரம்

### புளிங்கதேவன்முறிப்பு ரோட்டு வேலை

மேற்படி வேலைக்கான கேள்விகள் 1970-ம் ஆண்டு பங்குனி மாதம் 20-ந் திகதி முற்பகல் 10-00 மணி வரையில் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விகள் 19-3-70 நண்பகல் 12-00 மணி வரை வழங்கப்படும். கேள்விப் பிணையாக ரூபா 50-00தும் திருப்பிக் கொடுபடாத பத்திரப்பணம் ரூபா 5-00தும் செலுத்தியதன் பின்பே பத்திரம் வழங்கப்படும்.

வேலை விபரங்கள் யாவும் இக்காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்.

த. செல்வத்துரை,
அக்கிராசனர்,
கரைச்சிக் கிராம சபை,
பரந்தன்.

1-3-1970. 1972


## சென் ஜோன்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும், சென். ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையில், சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி வெற்றி பெற்றது.

சென். ஜோன்ஸ் இரண்டு இன்னிங்ஸிலும் முறையே 95, 95-9 ஆகிய ஓட்டங்களைப் பெற்றது. சென். பற்றிக்ஸ் இரண்டு இன்னிங்ஸில் முறையே 37, 73 ஆகிய ஓட்டங்களைப் பெற்றது.

## குருநாகலில் யாழ். இந்து வெற்றி

# அடுத்து மூன்று சிக்சர்கள்!

## வீரர் நிருத்தானந்தன் 9 விக்கட்டுக்களை வீழ்த்தினர்

மொத்தத்தில் குறைவாகவே ஓட்டங்கள் சம்பாதிக்கப்பட்ட ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கிரிக்கெட் கோஷ்டி புனித ஆன் கல்லூரியை 67 ஓட்டங்களால் வென்றது.

யாழ். இந்து பந்து வீச்சு வீரர் நிருத்தானந்தனின் பந்துவீச்சினால் மூச்சுத் திணறிய குருநாகல் வீரர் அவ் வாட்டத்தில் அவர்கட்டம் மட்டும் 51 ஓட்டங்களைப் பெற்று 9 விக்கட்டுகளை இழந்தனர். நிருத்தானந்தனின் துடுப்பாட்டமும் கணகணப்பாயிருந்தது. 23 ஓட்டங்களை அவர் பெற்றார்.

யாழ். இந்து அடுத்து மூன்று பந்துகளை கயிற்றை தாண்டி காற்றில் பறக்க அடித்த மூன்று 'சிக்சர்'களும் பார்த்தவரைப் பரவசத்தில் ஆழ்த்தியது.

புனித ஆன் கல்லூரிக் கோஷ்டியில் குறிப்பிடக் கூடிய வகையில் ஆடியவர் எறிக் சில்வா ஆகும்.

யாழ் இந்து முதலாவது ஆட்டத்தில் 102 ஓட்டங்களைப் பெற்றனர். விபுலானந்தன் 19 உம், சுரேந்திராவின் 17 உம், சற்குணசீலனின் 15 உம் பாராட்டுக்குரியவை. இரண்டாவது ஆட்டத்தில்அவர்கள் பெற்ற 101 ஓட்டங்களில் நிருத்தானந்தன் 23 விக்னேஸ்வரன் ஆட்டமிழக்காமல் 21, கெங்கா்தரன் 14, சற்குணசீலன் 20 என சாடித்தள்ளினர்.

புனித ஆன் கல்லூரி முதலாவது ஆட்டத்தில் பெற்ற 63 ஓட்டங்களில் 26 ஐ சம்பாதித்த பெருமை எறிக் சில்வாவுடையதாகும். நிருத்தானந்தன் 24 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளும், விக்கினேஸ்வரன் 18 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளும், விபுலானந்தன் 15 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுகளும் வீழ்த்தினர்.

அவர்களுடைய இரண்டாவது ஆட்டத்தில் ஜெரிசெனிவரத்னவின் 24, எறிக் சில்வாவின் 26 உட்பட 73 ஓட்டங்களே அவர்களால் பெற முடிந்தது. மீண்டும் நிருத்தானந்தன் 3, விக்கினேஸ்வரன் 3, விபுலானந்தா 3 விக்கட்டுகளைக் கைப்பற்றினர். -ரசிகன்

# செய்திச் சுருக்கம்

## தென்மராட்சியில் 34000 வாக்காளர்கள்

கைதடி, செவ்வாய்

எதிர்வரும் ஆட்சிமன்ற பொதுத்தேர்தலில் தென்மராட்சித் தொகுதியில் 34,000 வாக்காளர் வரை வாக்களிக்க இருக்கிறார்களென்றும். 38 இடங்களில் வாக்கு கொடுக்கும் இடங்கள் அமைக்கப்படுமெனவும் தென்மராட்சிக் காரியாதிகாரி திரு. ஆர். சிதம்பரப்பிள்ளை தெரிவித்தார்,

## புதிய நிர்வாகிகள்

கைதடி, புதன்

கைதடி மத்தியில் கைதடி கிராமசபை உப தலைவர் திரு. ஆர். சிதம்பரன் தலைமையில் நடந்த தமிழரசு வாலிப முன்னணிக் கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள்: திருவாளர்கள் ஆர். சிதம்பரன் வி சுப்பையா, எஸ். சின்னத்தம்பி, எஸ். கனகு. என், ஆறுமுகம். தலைவர்: திரு. எஸ். இந்திரராசா உபதலைவர்: திரு. எம். கணேசு காரியதரிசி: திரு. எஸ் சின்னத்துரை உப காரியதரிசி, திரு. எஸ். கணேசு, தனாதிகாரி திரு. வி. வடிவேலு.

## விளையாட்டுப்போட்டி

யாழ்ப்பாணம், புதன்

நல்லூர் வட்டாரக் கனிஷ்ட பாடசாலைகளின் வருடாந்த விளையாட்டு விழா அடுத்தமாதம் 4-ம் 5-ம் தேதிகளில் யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. கல்வி பிரதம அதிகாரி திருமதி பாமர்தலைமையில் பரிசளிப்பு விழா நடைபெறும்.

நல்லூர் வட்டாரத்தைச் சேர்ந்த சுமார் 26 பாடசாலைகள் இவ்விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றுகின்றன.

## அருணோதயா வெற்றி

யாழ்ப்பாணம், புதன்

அரியாலை அருணோதயா விளையாட்டுக்கழகத்திற்கும் நல்லூர் மூத்தவிநாயகர் கோவில்விளையாட்டுக்கழகத்திற்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான கரபந்தாட்டப் போட்டியில் அரியாலை அருணோதயா விளையாட்டுக்கழகம் 2-1 ஆட்டங்களால் வெற்றியீட்டியது மத்தியஸ்தராக சாவகச்சேரிப்பகுதி விளையாட்டு அதிகாரி திரு. மு. சீவரத்தினம் கடமையாற்றினார்:

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய விடுதி மாணவர்களுக்கும் அருணோ

## "சைவசித்தாந்தம் புறக்கணிப்பா?"

யாழ்ப்பாணம், புதன்

சைவ சித்தாந்தம், ஜி. ஸி. ஈ. உயர் வகுப்புக்கான இந்துசமயப் பாடத்திட்டத்தில் புறக்கணிக்கப்பட்டதை ஆட்சேபித்து, அத்தகைய திட்டத்தை அமுல்நடத்த வேண்டாமெனக் கல்வி மந்திரியை அவசரத் தந்தி மூலம் யாழ்ப்பாணச் சைவ பரிபாலனசபை கேட்டுள்ளது.

இப்போது கல்வி இலாகா இந்துசமயப் பாடத்திட்டத்தில் சைவ சித்தாந்தத்துக்கு இதுவரை அளிக்கப்பட்டு வந்த இடத்தை மாற்றி வேதாந்தத்துக்கு முக்கிய இடம் அளித்திருப்பதை ஆட்சேபித்து யாழ்ப்பாணச் சைவபரிபாலன சபை நாவலர் ஆச்ரம மண்டபத்தில் கூட்டம் ஒன்றை நடாத்தியது.

## படகுவிபத்தில் மாண்டவர்க்கு அனுதாபம்

### கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், புதன்

யாழ் உதைபந்தாட்டச் சங்கத்தின் பொதுக் கூட்டம் கடந்த 28-ம் திகதி செயலாளர் நா. பாலசுப்பிரமணியத்தின் தலைமையில் கூடியது.

இக் கூட்டத்திற்கு சமுகம் கொடுத்த கழகங்களில் ஒன்றான 'கிறீன்பீல்ட்' கழக அங்கத்தவர் திரு. எம். டி. தம்பிராசா, 'பாலைதீவு படகு விபத்தில் உயிர் இழந்தவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் முகமாக இக் கூட்டத்தை ஒத்திவைக்க வேண்டும்.' எனக் கொண்டு வந்த பிரேரணை கூட்டத்தில் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப் பட்டதினால் கூட்டத்தை திரு. பாலசுப்பிரமணியம் மறு அறிவித்தல் வரை ஒத்திவைத்தார்.

(தே. நி)

## பத்திரிகைகளின்றி வாசிகசாலை

பூநகரி, செவ்

கிளிநொச்சி பட்டினசபையின் கீழ் இயங்கிவரும் மத்திய பொதுசன நூல் நிலையம் வெறிச்சோடிக் காட்சியளிக்கின்றது, காரணம்வாசிகசாலைக்கு எதுவித தினசரிப் பத்திரிகைகளோ சஞ்சிகைகளோ கடந்த இருவாரமாக வருவதில்லையாம். பட்டினசபையின் வரவு செலவுத்திட்டம் மூன்றாவது தடவையாகவும் தோல்வியடைந்தமையே இவ்வித நிலைமைக்குக்காரணமெனத் தெரிகிறது.

இச்சபையில் ஆளும் கட்சியில் மூன்று உறுப்பினரும் எதிர்க்கட்சியில் நாலு உறுப்பினரும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது,

# இன்றையபலன்

மாசிமாதம் 21-ம் திகதி [4-3-70]

சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

**மேஷம்**- வசதிகள் பெருகும் வரவிலும் திருப்தி ஏற்படும். செல்வாக்குப் பெருகும். செல்வாக்கு படைத்தவர்களின் ஆதரவு கிடைக்கும் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த விடயமொன்று உங்களுக்கு சாதகமான பலனைத் தரும்.

**ரிஷபம்**- மகிழ்ச்சிகரமான தினம். குடும்பத்தில் விருந்தினர்கள் வருகையால் கலகலப்பு ஏற்படும் நீண்ட நாள் நண்பர் ஒருவரை மீண்டும் சந்திப்பீர்கள். கணவன் மனைவி உறவு மிகவும் நெருக்கமாக இருக்கும்.

**மிதுனம்**- கருடப்பார்வை உங்களை வட்டமிடும். முன்னேற்றத்தை தடுப்பதற்கு

உங்களை மகிழ்விக்க பவனி வருகிறார்கள்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஒட்டுசுட்டான் ஆகியமூன்று பாடசாலைகளும் வெற்றியீட்டின.

வளவு' நெல்லியடி கரவெட்டி. 1974


உங்களை மகிழ்விக்க பவனி வருகிறுர்கள்
எம். ஜி. ஆர் ஜெயலலிதா
**காதல் வாகனம்**
வின்ஸரில்
தினசரி 4 காட்சிகள்

ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
அசோகன் - சோ - சந்திரபாபு
நடித்த
**அடிமைப் பெண்**

வெற்றிகரமான 2 வது மாதம்
கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)
**வெலிங்டன்** யாழ்ப்பாணம்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய
ஜனதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்ற
வெற்றிச்சித்திரம்




**சிவாஜிகணேசன் பத்மினி**
பாலையா
நாகேஷ்
நம்பியார்
ஏ.வி.எம். ராஜன்
மனேரமா
மற்றும்பலர் நடித்த



சிவாஜிகணேசன் அளிக்கும்




**வெஸ்லிசினிமா**
மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30மணி
எம்.ஜி.ஆர். - சரோஜாதேவி
நடித்த
**பெற்றால்தான் பிள்ளையா**
இத்துடன் சென்னையில் நடைபெற்ற 2-வது அனைத்துலக தமிழ் ஆராய்ச்சி மகாநாடும் கலரில் காண்பிக்கப்படும்.

இன்று மட்டும்
**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 10-00
பிரீ போயா, போயா 4காட்சிகள்
என். டி. ராமராவ்
நடித்த
**அபூர்வ பிறவிகள்**

**ஸ்ரீ காலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30 9-30
பிறிப்போயா, போயா2-30 மணி
சிவாஜி கணேசன்
நடித்த
**குழந்தைகள் கண்ட குடியரசு**

வல்வெட்டித்துறை
**றஞ்சனு தியேட்டர்**
தினசரி: 6-30, 9-30
சிவாஜி - பத்மினி - ராமராவ்
நடித்த
**சம்பூரண ராமாயணம்**

**MANOHARA**
JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
HELGA
The most revealing Sex ebucaiton Film ever released!
(Strictly for adults only)
கருவுற்பத்தி முதல் பிரசவம் வரையில் இதுவரை திரைக்கு அனுமதிக்கப்படாத பல சம்பவங்களை புதிய சாதனைக் கருவிமூலம் வெளிப்படுத்திக் காட்டும் பிரசவ சித்திரம்.
**ஹெல்கா**
(கட்டாயமாக வயது வந்தவர்களுக்கு மட்டும்)

**REGAL** JAFFNA
Daily 4-15, 7 & 9-45 p.m
Poya, Prepoya 4 Shows
Tony Franciosa
and Anjanette Comer
in
IN ENEMY COUNTRY
(Technicolor)


...ன். ஜோன்ஸ் இரண்டு இன்னிங்ஸிலும் முறையே 95, 95-9 ஆகிய ஓட்டங்களைப் பெற்றது. சென். பற்றிக்ஸ் இரண்டு இன்னிங்ஸில் முறையே 37, 73 ஆகிய ஓட்டங்களைப் பெற்றது.

(தே. நி)

## வெற்றிகாண இறைவழிபாடு

ஒட்டுசுட்டான், செவ்

ஒட்டுசுட்டான் சின்னத்தம்பிவித்தியாசாலை மாணவ மாணவிகளையும் பொதுமக்களையும் கொண்டஒரு ஆராதனைக்குழு ஒட்டிசுட்டான் கி. ச. தலைவர் தலைமையில் பொல்கொல்லையில் பிரதமரால் ஆரம்பிக்கப்பட்டமகாவலி கங்கைதிசை திருப்புந் திட்டம்பூரண வெற்றிகாண வேண்டுமென ஒட்டுசுட்டான் சிவன் கோவிலில் விசேஷ பூசையும் கூட்டுப் பிரார்த்தனையும் செய்துவழிபாடு செய்தனர்,

... ...

## இலட்சியமன்ற ஆண்டு விழா

மீசாலை, செவ்வாய்

மீசாலை இலட்சிய மன்றத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழா இம்மாதம் 6-ம் திகதி மீசாலையிலுள்ள சிவன் அரங்கில் நடைபெறவிருக்கிறது.

சாவகச்சேரி நகரசபைத் தலைவர் தி. கனகரத்தினம் தலைமையில் நடக்கவிருக்கும் இவ்விழாவில் முன்னுள் சாவகச்சேரி எம் பி திரு. வி. குமாரசாமி உரை நிகழ்த்துவார். ''இக்கால வாலிபர்'', ''தருமம் தலைகாக்கும்'', ''யார் இந்த முகமூடி'' ஆகிய மூன்று நாடகங்களும் மற்றும் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும்

## நிவாரண நிதி திரட்ட தீர்மானம்

யாழ்ப்பாணம், புதன்

தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணியின் யாழ். கிளைக் கட்சிக் காரியாலயததில் வழக்கறிஞர் எம். எஸ். சுந்தரலிங்கம் தலைமையில் கூடியது.

பாலைதீவுப் படகு விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நிதிதிரட்டி உதவுமாறு யாழ்ப்பாண அரசாங்க அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணியின் யாழ். கிளை, அதன்பொருட்டுப் பொதுமக்களிடம் இருந்து பணம் திரட்டி அரசாங்க அதிபரிடம் ஒப்படைக்கத் தீர்மானித்துள்ளது.

எஸ். இந்திரராசா உபதலைவர்: திரு. எம். கணேசு காரியதரிசி: திரு. எஸ் சின்னத்துரை உப காரியதரிசி, திரு. எஸ். கணேசு, தனதிகாரி திரு. வி. வடிவேலு.

0 0 0

யாழ்ப்பாணம், புதன்

இலங்கை திருவள்ளுவர் முன்னேற்றக் கழக அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது திரு. சவரி தலைவராகவும் இராமலிங்கம். யோனு, செபமாலை ஆகியோர் உபதலைவர்களாகவும், ஆறுமுகம், நல்லையா ஆகியோர் இணைச் செயலாளர்களாகவும் வேபால கிருஷ்ணன் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

0 0 0

திருகோணமலை, செவ்

திருமலை மாவட்ட தமிழ் ஆசிரியசங்க அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. வ. தங்கராசா உபதலைவர்கள்: திரு. வி. கந்தசாமி. வே. வேல்முருகு திருமதி சி. கிருஷ்ண செயலாளர்: மா. பாலசுந்தரம் உப செயலாளர்: க. ஜெபரத்தினம் தனதிகாரி: இ. தெய்வநாயகம்: பரீட்சைக்காரியதரிசி: திருமதி பா. நல்லரெத்தின சிங்க கலாச்சாரக் காரியதரிசி செல்வி விஜய சௌந்தரி தாமோதரம்பிள்ளை.

டியது மத்தியஸ்தராக சாவகச்சேரிப்பகுதி விளையாட்டு அதிகாரி திரு. மு. சிவரத்தினம் கடமையாற்றினர்:

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய விடுதி மாணவர்களுக்கும் அருணேதயா விளையாட்டுக்கழகத்திற்கும் இடையே நடைபெற்ற மற்றெரு சிநேகபூர்வமான கரபந்தாட்டப்போட்டியில் அருணேதயா விளையாட்டுக் கழகம் 2-1 ஆட்டங்களால் வெற்றியீட்டியது. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் முதல் ஆட்டத்தை கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய விடுதி மாணவர்களும் இறுதி 2 ஆட்டங்களையும் அரியாலை அருணேதயா விளையாட்டுக் கழகமும் பெற்றன மத்தியஸ்தராக ஆசிரியர் க. சுப்பிரமணியம் கடமையாற்றினர்.

## ஓய்வு பெறுகிறர்

யாழ்ப்பாணம், புதன்

எழுவை தீவைத் தாயகமாகக் கொண்டவரும், ஊர்காவற்றுறை வாசியுமான திரு பே. மனுவேற்பிள்ளை ஆசிரியர் இம்மாத இறுதியில் தனது முப்பத்தொன்பது வருட சேவையிலிருந்து இளைப்பாறுகின்றர்.

புங்குடுதீவு றேமன் கத்தோலிக்க பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் பெற்றேர்களும் இவரின் சேவையைப் பாராட்டி பாராட்டுப் பத்திரமும் வழங்கிக் கௌரவித்தனர்.

சாதகமான பலனைத் தரும்.

**ரிஷபம்-** மகிழ்ச்சிகரமான தினம். குடும்பத்தில் விருந்தினர்கள் வருகையால் கலகலப்பு ஏற்படும் நீண்டநாள் நண்பர் ஒருவரை மீண்டும் சந்திப்பீர்கள். கணவன் மனைவி உறவு மிகவும் நெருக்கமாக இருக்கும்.

**மிதுனம்-** கருடப்பார்வை உங்களை வட்டமிடும். முன்னேற்றத்தை தடுப்பதற்கு விஷமிகள் திட்டம் கோடுவார்கள் சிலருக்கு அன்னிய வாசம் அகாலபோசனமும் உண்டு.

**கடகம்-** வெற்றி உமது அருகில் விரைந்துவரும். எதிர்த்தவர்களே ஆதரவுதருவதற்கு முன்வருவார்கள். களஸ்திரவழியாலும் நன்மைகள் சேரும் காதலர்களுக்கு சிறப்பான தினம்.

**சிம்மம்-** ஏக்கத்தின் சாயல் தாக்கும். எதிர்பாராத விதமாக சிக்கல்களில் மாட்டிக்கொள்ளநேரிடும். உள்ளக் கிடக்கைகளை எவரிடமும் சொல்லாதிருக்கவும். நிதானம் வேண்டும்.

**கன்னி-** மற்றவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாவீர்கள். பெரியவர்களின் உறவு தாராளமாகக் கிடைக்கும். குறிக்கோளில் வெற்றிஉண்டு.

**துலாம்-** வெற்றிப்பாதையில் வீறுநடைபோடுவீர்கள். தொழில்துறையில் புதிய உற்சாகம் பிறக்கும்: எதிரிகள் மத்தியில் ஏற்படும் மனமாற்றம் உங்கள் செல்வாக்கை வளர்க்கும் சுபதினம்.

**விருச்சிகம்-** வரவிலும் உயர்வு தென்படும் பெரியவர்களின் வாழ்த்தும் கிடைக்கும். எழுத்தாளர்களுக்குப் புகழ்குவியும். பொதுவாகக் கலைஞர்களுக்கு இன்று சிறப்பான நாள் புதினத்திற்கும் இடமுண்டு.

**தனுசு-** பணம் பறிப்பதற்காக ஒரு கோஷ்டியினர் புகழ்பாடிக்கொண்டிருப்பர். எவரிடத்திலும் அதிக நம்பிக்கை வைக்கவேண்டாம். கடல்பிரயாணத்தை தவிர்த்துக்கொள்வது நன்று.

**மகரம்-** பிள்ளைகளின் தொல்லைகள் கவலையைத்தரும். பிறருடன் பகைத்துக்கொள்ளவும் நேரிடும். குடும்பத்திலும் சிறிது பூசல் வீசலாம். வெளியிடத்துத் தொடர்புகளில் அமைதிவேண்டும்.

**கும்பம்-** அதிகாரப்பேறுக்கும் அதிக பொருள்வரவுக்ும் இடமுண்டு. ஆக்கப்பணிகளில் ஈடுபடுவீர்கள். குடும்பத்திலும் மகிழ்ச்சி நிலவும். மேலிடத்திலிருந்து திருப்திகரமான செய்தி கிடைக்கும்.

**மீனம்-** எதிர்பார்த்தவேதனம் இடையில் தடைப்படலாம். சிலர் வாழ்க்கையில் கடன்தொல்லையும் அதிகரிக்கும். சகோதரவழியால் சஞ்சலத்துக்கும் இடமுண்டு. தெய்வநம்பிக்கைவேண்டும்.


'ஈழநாடு' காரியாலயத்தில்

**விற்பனைக்குள்ள புத்தகங்கள்**

| | புத்தகங்கள் [ஆங்கில மொழியில்] | | ஆக்கியோன் | விலை |
|---|---|---|---|---|
| 1 | முதலாவது உலக தமிழ் மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆராய்ச்சிக்கட்டுரைத்தொகுதிகள் I & II | — | மகாநாட்டில் கலந்துகொண்ட புகழ்பெற்ற பேர் அறிஞர்கள் | ரூபா 250/- |
| 2. | தற்கால தமிழ் இலக்கியத்தில் பெண் | — | ஸ்ரீமதி லோகநாயகி நன்னித்தம்பி | ரூபா 12/- |
| 3. | மகாபலிபுரம் பற்றி விளக்கப்படங்களோடு கூடிய நூற்பட்டியல் | — | William Willetts | ரூபா 5/- |
| 4. | திராவிடமொழிகள் பற்றிய விபரங்கள் அடங்கிய நூற்பட்டியல் | — | M. Andronov | ரூபா 5/- |
| 5. | தூரதேசங்களில் தமிழ் படிப்பு | — | | ரூபா 15/- |
| | ,, ,, ,, | — | (கலிகோ பைண்டிங்) | ரூபா 21/- |
| 6. | மகாத்மாகாந்தி வெள்ளேடு (Album படங்களுடன்) | — | ராஜேந்திரபிரசாத் முன்னுரையுடன் | ரூபா 10/- |
| 7. | மகாத்மா காந்தியின் செய்திகள் | — | மோகன்ராவ் | ரூபா 1/50 |
| 8. | சிறுவர்கள் ராமாயணம் | — | M. பூதலிங்கம் | ரூபா 2/- |
| 9. | காந்தி கதை (வண்ணப்படங்களுடன்) | — | | ரூபா 2/50 |

கையிருப்பில் சொற்ப பிரதிகளே உள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரொடீஷியா மீது நடவடிக்கை?

# பாதுகாப்புசபையை அவசரமாக யு தாண்ட் கூட்டுகிறார்

## ராஜீய தொடர்புகளை அமெரிக்காவும் துண்டிக்கும்

## பொருளாதார நிர்ப்பந்தத்தை நீடிக்க பிரிட்டன் முடிவு

நியுயோர்க், மார்ச் 3

ரொடீஷியா குடியரசு நாடாகத் தன்னைப் பிரகடனப்படுத்திக்கொண்டிருப்பதின் காரணமாக எழுந்துள்ள நிலைமை குறித்து என்ன நடவடிக்கை எடுப்பது என்பது பற்றி ஆராய அவசரமாகக் கூடும்படி ஐ. நா. பாதுகாப்புச்சபை அங்கத்தவர்களை பொதுச்செயலாளர் யுதாண்ட் கேட்டிருக்கிறார்.

சட்டவிரோத ஆட்சியாளர் திரு. ஐயன் ஸிமித்தின் தலைமையிலான ரொடீஷியா நேற்றுமுன்தினம் தன்னைச் சுதந்திரக் குடியரசாகப் பிரகடனப்படுத்திக்கொண்டது இதன் மூலம் ரொடீஷியாவில் பெரும்பான்மை மக்களான ஆபிரிக்கர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு சிறுபான்மை வெள்ளையரின் ஆட்சிக்கு வழிசெய்யப்பட்டிருக்கின்றது

ரொடீஷியா குடியரசாகப் பிரகடனப்படுத்திக் கொண்டிருப்பதைப் பல நாடுகள் கண்டித்திருக்கின்றன.

ஐ. நா. வில் அங்கம் வகிக்கும் 40 ஆபிரிக்க நாடுகளின் பிரதிநிதிகள் நேற்றுக்கூடி ரொடீஷியாவுக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பது பற்றி ஆராய்ந்தனர். ரொடீஷியாவை எந்த வொரு நாடும் அங்கீகரிக்கமாட்டாதுஎன்று அவர்கள் நம்பிக்கை வெளியிட்டனர்.

ரொடீஷியா மீது பிரிட்டன் தொடர்ந்து பொருளாதார நிர்ப்பந்தங்களை ஏற்படுத்திவரும் என்று பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் திரு. ஸ்ருவார்ட் கூறியிருக்கிறார் ரொடீஷியாவுடன் ராஜதந்திர உறவுகள் வைத்திருக்கும் பத்து நாடுகளையும் இந்த உறவைக் கைவிடும்படி பிரிட்டன் கேட்டிருக்கின்றது. ரொடீஷியாவிலுள்ள 'கான்சல்' காரியாலயத்தை மூடிவிடும்படி அமெரிக்காவை பிரிட்டன் கேட்டிருக்கின்றது.

ரொடீஷியாவிலுள்ள கான்சல் காரியாலயத்தின் எதிர்காலம் பற்றி அமெரிக்கா தொடர்ந்து ஆலோசித்து வருவதாக ராஜாங்க அமைச்சு உயர்தர அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எந்தநிலைமையிலும்ரொடீஷியாவை அமெரிக்கா அங்கீகரிக்கப்போவதில்லை யென்றும் அந்த அதிகாரி வலியுறுத்தினர்.

ரொடீஷியா தன்னை குடியரசாகப் பிரகடனப் படுத்திக்கொண்டிருப்பதால் அதன்மீது ஐ. நா. பாதுகாப்புச்சபை நடவடிக்கை எடுக்குமா இல்லையா என்பது யுதாண்ட அழைத்திருக்கும் பாதுகாப்புச்சபைக் கூட்டத்தில்தெரியவரலாம்.

சில நாடுகள் நடந்துகொள்ளும் முடிவை உத்தேசித்துபாதுகாப்புச் சபையை அவசரமாகக் கூட்டும் அதிகாரம் ஐ நா பொதுச் செயலாளருக்கு உண்டு. இந்த அதிகாரத்தைப் பிரயோகித்தே யு தாண்ட் இப் பாதுகாப்புச்சபையைக் கூட்டியிருக்கிறார்.

1960-ம் ஆண்டு கொங்கோவில் ஏற்பட்ட நெருக்கடி நிலைமைகளை யொட்டி இவ்வாறு பாதுகாப்புச்சபை அவசரமாக அழைக்கப்பட்டிருந்தது.

## இறந்த வாலிபர் உயிர்பெற்ற அதிசயம்

லேகோஸ், மார்ச். 3

நைஜீரியா வில் கார் விபத்தொன்றில் சிக்கி மரணமான இளைஞர் ஒருவர் மீண்டும் உயிர் பெற்றிருக்கிறார்.

கார் விபத்தொன்றில் பிரக்ஞைஇழந்தநிலையில் இந்த இளைஞர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். ஆஸ்பத்திரியில் அவர் உயிர்பிரிந்துவிட்டதாக அறிவித்து சவச்சாலைக்கு சடலத்தை அனுப்பி விட்டார்கள். சுமார் 12 மணிநேரம் சடலம் சவச்சாலையில் கிடந்தது. மறுநாள் ஆஸ்பத்திரி தாதியொருவர்சவச்சாலையில் ஏதோ அசைவதைக்கண்டு. ஆச்சரியமுற்றார். அவர் கவனித்துப் பார்த்ததில் இறந்துபோன இளைஞரின் உடல் அசைவது தெரிந்தது. உடனே மீண்டும் சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் அவர் அனுமதிக்கப்பட்டு மூன்று நாட்களில் குணமடைந்து வீட்டுக்குச் சென்றார்.

## மூச்சுத் திணறி பெண் மரணம்

யாழ்ப்பாணம், புதன்

சுமார் 45 வயதான அடையாளம் தெரியாத பெண்மணி ஒருவரின் சடலம் ஒன்றினை தகவல் கிடைத்ததன் [illegible]யில் அச்சுவேலிப் பொலி[illegible] தொண்டமானாறு சன்னதி கோவில் கடற்கரையில் ஒதுங்கியிருக்கக் கண்டுபிடித்தனர் [illegible] பரிசோ[illegible] ஆஸ்பத்திரி வைத்திய அதி[illegible]

## 'அரசியல் என்பது புனிதமான தொண்டு'

—சாவகச்சேரி எம். பி,

மட்டுவில், செவ்.

''ஒரு தொகுதியின் ஆட்சிமன்ற உறுப்பினர் தனது தொகுதி முன்னேற்றத்தை கண்ணோட்டம் செலுத்துவதிலும் அடுத்து வரப்போகும் எமது சமுதாயத்தின் உரிமைகளையும் அவரின் சுதந்திர வாழ்வையும் தாண்டப் பெற்றுக் கொடுப்பதில் பெரிதும் அக்கறை செலுத்த வேண்டும். இதுதான் எமது இலங்கை தமிழரசுக் கட்சியின் உயரிய அடிப்படைக் கருத்தாகும்''

இவ்வாறு நேற்று அல்லாரையில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் பொதுக் கூட்டத்தில் சாவகச்சேரி ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. வ, ந. நவரத்தினம் பேசும் போது கூறினார்.

முன்னாள் கிராமசபை உறுபினர் திரு. க. கனகசபை தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. நவரத்தினம் தொடர்ந்து கூறியதாவது: ''அரசியல் என்பது சூதாட்டம் என்ற எண்ணம் அநேகரிடம் இன்று குடிகொண்டுள்ளது. உண்மையில் அரசியல் ஒரு புனிதமான தொண்டு. அத்தொண்டில் ஈடுபடுபவர் கடமை கண்ணியம் கட்டுப்பாடு ஆகிய பண்புகளிலிருந்து அணுவேனும் பிறழாது சேவை செய்ய வேண்டும். பொது மக்கள், தாம் தெரிவு செய்து அனுப்பிய அரசியல் கட்சிகள் கடந்த காலங்களில் அரசியலில் எத்துணை சேவைகளைச் செய்திருக்கிறது. இதில் எமது சமுதாயத்திற்கும் மொழி, கலை, கலாசாரத்திற்கும் எத்துணை பெருமை இருக்கிறது என்பதை சிந்திக்க வேண்டியது எங்களை தெரிவு செய்யும் எஜமானர்களாகிய உங்கள் கடமை.

எமது கட்சியின் இலட்சியம் நிறைவேற நாம் செல்ல வேண்டிய தூரம் இன்னும் சிறிது தொலைவில்தான் இருக்கிறது. இந்த இலட்சியத்தின் அடிப்படையைத்தான் நாம் எமது எதிர்கால சமுதாயத்திற்கு ஊட்டுவதுடன் கடந்த காலங்களில் எதிர்கால சமுதாயத்தின் சுதந்திரத்திற்காக பல புனித போராட்டங்களிலும் ஈடு[illegible]

## லெனின் பரிசு பெறும் கவிஞர்

மாஸ்கோ, மார்ச். 3

பிரபல உஸ்பெக் கவிஞர் கபூர் குலியாம் 1970-ம்ஆண்டு லெனின் பரிசுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார் இவர் 100க்கும் கூடுதல் நூல்களை இயற்றியுள்ளார். இவை 10 லட்சத்திற்கும் கூடுதல் பிரதிகளாக வெளியிடப்பட்டுள்ளன இவரது படைப்புகள் பல ஆங்கிலம், பிரேஞ்சு, ஸ்பானிஷ், பல்கேரியன், பேர்ஸியன், உருது மொழிகளில்மொழியாக்கம்செய்யப்பட்டுள்ளன ஏழை விவசாயின் மகனுகப்பிறந்த கவி குலியாம் ஓர் அச்சுத் தொழிலகத்தில் அச்சுக் கோப்பாளராக வேலை செய்தார். பின்னர் ஓர் ஆரம்ப நிலைப்பள்ளியில்ஆசியராகவும், அடுத்து ஒருபத்திரிகையாளராகவும் கடமையாற்றியுள்ளார். பின்னர் முழுநேர எழுத்தாளராக மாறினார். இவரது கவிதைகளின் பிரதான கதாநாயகர்களாக உழைக்கும் [illegible]கள் வருவது தற்செ[illegible]ான தல்ல. இவர் சமாதானப் போராட்டம் பற்றி [illegible]னது தாயகம் பற்றியும் காதல் ப[illegible]றியும் கவிதைகள் ப[illegible]யுள்[illegible]

## "குடும்ப கௌரவத்துக்காக யாரும் மதிக்கப்படுவதில்லை"

உடுப்பிட்டி, செவ்வாய்

'இலங்கையில் உடுப்பிட்டித் தொகுதி ஆசிரியர்களே தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்து வருகின்றனர் எனப் பாராட்டப்படுகின்றனர். எனது தொகுதியென்றமுறையில் இதனையிட்டுநான் பெருமைப்படுகின்றேன். இதர பகுதி ஆசிரியர்களும் உடுபிட்டித்தொகுதி ஆசிரியர்களைப் பின்பற்றுவதன் மூலம் தங்கள் பகுதிக்குப் பெருமையீட்டிக் கொடுக்கலாம்.'

இவ்வாறு உபசபாநாயகரும் உடுப்பிட்டி எம்.பியுமான திரு மு. சிவசிதம்பரம் உடுப்பிட்டி வட்டாரக் கனிஷ்ட பாடசாலைகளின் வருடாந்த விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் கூறினார். நெல்லியடி மத்திய மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

உப சபாநாயகர் மேலும் பேசுகையில், 'எதிர்காலத்தில் இந்நாட்டு அரசியல் வாதிகளாகவும், தலைவர்களாகவும் திகழப்போகிறவர்கள் இன்றைய சிறுவர்கள்தான். இவர்களை நற்பிரஜைகளாக உருவாக்கும் சிற்பிகள் ஆசிரியர்களே.

நாம் சிறுவர்களாகஇருந்த காலத்தில் இத்தகைய சந்தர்ப்பங்கள் கிடைக்காததாலேயே எம்மிடையே இப்போது பிளவுகள் பூசல்கள் உருவாகி வருவதற்குக் காரணமாகும். ஒருவருடைய திறமை குடும்ப கௌரவங்களைப் பொறுத்தது அல்ல. மக்களுக்காக ஒருவரது திறமை எப்படிப் பாவிக்கப்படுகிறது என்பதைக் கொண்டே அவரை மதிக்க வேண்டும்.

தேசிய அரசாங்கம் கல்விக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறதோ அவ்வளவு முக்கியத்துவத்தை விளையாட்டுக்கும் கொடுத்து வருகின்றது' என்று குறிப்பிட்டார்.

உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரிதிரு எஸ். மகேஸ்வரஐயர்விழாவுக்குத் தலைமை வகித்தார்.

உடுப்பிட்டி வட்டார விளையாட்டுக் கல்வியதிகாரி திரு எஸ். கே. கார்த்திகேசுவிற்குப் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது தலைமையாசிரியர் திரு ஜே. கே. செல்லத்துரை நன்றியுரை கூறினார்,

## கியூபா யு. எஸ். கப்பலை விடுவித்தது

நியுயோர்க், மார்ச் 3

கியூபா கடற்படையினர் கைப்பற்றிவைத்திருந்த அமெரிக்க சிறுகப்பலொன்றையும் அதன் மாலுமிகள் ஐவரையும்விடுவித்திருக்கின்றது. இக்கப்பல் மின்விசைக் கருவிகளைக்கொண்டு கடலில் ஆழ்ந்துபோன கப்பல் திரவியங்களைக்கண்டுபிடிப்[illegible]

## "ஆத்ம சாந்திக்கு இறைவனை வேண்டுகிறேன்"

யாழ்ப்பாணம், புதன்

''பாலைதீவுக் கடலில் பலியானவர்களின் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றேன், இவ்விபத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்கள்.''

சுகவீனம் காரணமாகக் கொழும்பில் இருக்கும் யாழ்ப்பாண ஆயர்எமிலியானுஸ் பிள்ளை ஆண்டகை பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இறந்தவர்களின் ஆத்ம சாந்திக்காக சகல தேவாலயங்களிலும் பலிபூசைகள் ஒப்புக்கொடுக்கப்பட்டதுடன் ஆராதனைகளும்நடைபெற்றன,

யாழ். துணை ஆயர் எல். ஆர். அன்ரனி இறந்தவர்களின் குடும்பங்களுக்கு நேரில் சென்று ஆறுதல் கூறினர்.

## தாக்குதல் வழக்கு ஒத்திவைப்பு

மட்டுவில், செவ்

''ஐயோ, ஐயோ என்று யாரோ அழும் சத்தம் கேட்டு வெளியே எட்டிப் பார்த்த போது வெளியே சென்ற நடராசாவை சிலர் தாக்கி அவர் கால்களில் பிடித்துஇழுத்தார்கள். என்னைக் கண்டதும் என்னையும் தாககினார்கள். நாங்கள் இருவரும் ஓடிப்போய் பற்றை மறைவிலும் மரத்திலும் ஏறி தப்பித்துக் கொண்டோம்.''

தாக்கிக் காயப்படுத்தியதாக சாவகச்சேரிப் பொலிசாரால் தொடரப் பட்ட வழக்கில். சாட்சியமளித்த மட்டுவில் வடக்கைச் சேர்ந்த எஸ். சிதம்பரப்பிள்ளை மேற்கண்டவாறு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலை[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந்தனர். எந்தவொரு நாடும் அங்கீகரிக்கமாட்டாதுஎன்றுஅவர்கள் நம்பிக்கை வெளியிட்டனர்.

ரொடீஷியாவை வித்தார். எந்தநிலைமையிலும்ரொடீஷியாவை அமெரிக்கா அங்கீகரிக்கப்போவதில்லை - பென்

கடி நிலைமைகளை யொட்டி இவ்வாறு பாதுகாப்புச்சபை அவசரமாக அழைக்கப்பட்டிருந்தது.

# பிரஞ்சு அதிபரிடம் நிக்ஸன் மன்னிப்பு கோரினர்

## விருந்துபசாரத்திலும் நேரில் கலந்து கௌரவிக்கிருர்

நியுயோர்க், மார்ச். 3 பிரஞ்சு அரசின் மேற்காசிய கொள்கைக்கு எதிராக அமெரிக்காவில்இடம் பெற்றுள்ள ஆத்திரமூட்டும் ஆர்ப்பாட்ட சம்பவங்கள் சம்பந்தமாக அமெரிக்க அதிபர் நிக்ஸன் மன்னிப்புக் கேட்டிருக்கிருர்.

பிரஞ்சு அதிபர் திரு. பொம்பிடோவுக்கு திரு. நிக்ஸன் தமது சொந்தமுறையிலும் அரசாங்கத்தின் சார்பிலும் டெலிபோன் மூலம் மன்னிப்பு தெரிவித்தார். அமெரிக்காவில் சுற்றுப் பிரயாணம் மேற்கொண்டிருக்கும் பிரஞ்சு அதிபருக்கு எதிராகப்பல இடங்களிலும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

ஒருசிலர் நடத்திய இந்த ஆர்ப்பாட்டங்கள் அமெரிக்கமக்களின் உணர்ச்சிகளைப் பிரதிபலிப்பதாகாது என்று அதிபர் நிக்ஸன் தெரிவித்திருக்கிருர்.

இன்றுநியுயோர்க்கில் அதிபர் பொம்பிடோவைக் கௌரவிப்பதற்காக நடைபெறும் விருந்துபசாரத்திலும் அதிபர் நிக்ஸன் கலந்துகொள்கிருர். இரு நாடுகளுக்குமிடையிலுள்ள உறவுகளைப் பலப்படுத்துவதாக அதிபர் நிக்ஸனின் இந்த நடவடிக்கை அமைகிறதென்று கருதப்படுகின்றது அமெரிக்காவில் அதிபர் பொம்பிடோ விஜயம் செய்த நகர்களில் எல்லாம் யூதர்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்தியிருக்கிருர்வள். அரபுநாடான லிபியாவுக்கு பிரான்ஸ் மிராஜ்சண்டை விமானங்களைக் கொடுப்பதற்கு எதிராகவே இந்த ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன.

அவரைக் கௌரவிப்பதற்காக இன்று இரவுவிருந்து நடைபெறவிருக்கும் ஓட்டலின் முன்னும் யூதர்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்துகிருர்கள் ஓட்டலுக்குள் இவர்கள் போய்விடாதபடியும் வன்முறைகள் இடம் பெருமலும் பொலிசார் கண்காணித்துவருகிருர்கள். யூதர்களின் தலைவர்களை சந்திப்பதற்கு இணங்கியிருந்த திரு பொம்பிடோ இப்பொழுது இந்தச் சந்திப்பை ரத்துச் செய்துவிட்டார். இதனுல் யூதர்கள் மேலும் கொதிப்படைந்திருப்பதாகத் தெரிகின்றது.

நேற்று ஐ நா. தலைமைச் செயலாளர் யுதான்ட்டுடன் மேற்காஸியா பற்றியும் இதர உலகப் பிரச்னைகள் பற்றியும் பிரஞ்சு அதிபர் பேச்சு வார்த்தை நடத்தினுர் இந்தப் பேச்சுக்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த கட்டிடத்துக்கு வெளியேயும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

அமெரிக்காவில் தமக்கு எதிராக நடைபெற்ற ஆத்திரமூட்டும் ஆர்ப்பாட்டங்கள் சம்பந்தமாக அதிபர் நிக்ஸன் மன்னிப்புத் தெரிவித்தமைக்காக பிரஞ்சு அதிபர் பொம்பிடோ நன்றி தெரிவித்திருக்கிருர்.

படகு விபத்து பற்றி

# யாழ். மாநகரசபைக்கு வரும் தீர்மானம்

யாழ்ப்பாணம், புதன் ''பாலைதீவு, புனித அந்தோனியார் ஆலயத்துக்கு யாத்திரை மேற்கொண்ட பக்தர்கள் பலர் விபத்துக்குள்ளாகி ஆழியில் உயிர் நீக்க நேர்ந்ததையிட்டு இச்சபை வருந்துவதுடன், அங்கு உயிர் நீத்தவர்களின் குடும்பங்களுக்குச் சபை தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது'' எனக் கோரும் தீர்மானம் யாழ்ப்பாண மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் கொண்டுவரப்படவிருக்கிறது. 5-ம் வட்டார உறுப்பினரான திரு. எஸ். ஜே. அன்ரனி இத்தீர்மானத்தைப் பிரேரிப்பார்.

''பாலைதீவு யாத்திரிகர்கட்கு நேர்ந்த விபத்துப் போன்று மீண்டும் நிகழாவண்ணம் றெக்கிளமேஷனை அடுத்த இறங்கு துறையில் யாத்திரைக் காலங்களில் போதிய பாதுகாப்புஅளிக்க வேண்டிய சகல முயற்சிகளையும் மேற்கொள்ளுமாறு அரசாங்க அதிபரைக் கேட்டுக் கொள்வதென இச்சபை தீர்மானிக்கின்றது'' எனக் கோரும் தீர்மானத்தையும் திரு. அன்ரனி சபையில் பிரேரிப்பார்.

— —

## பொன் விழா

யாழ்ப்பாணம். புதன் யாழ்ப்பாண மத்திய கல்லூரி வர்த்தக மன்றம் பொன்விழாவைக் கொண்டாட ஏற்பாடு செய்து வருகிறது. புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: இ இந்திரன்: காரியதரிசி; சந்திரசேகரம், உபதலைவர்: கதிர்காமநாதன், உபகாரியதரிசி சி. செல்வக்குமார், தனுதிகாரி; ரவீந்திரன்.

...ர் தொண்டமானுறு சன்னதி கோவில் கடற்கரையில் ஒதுங்கியிருககக் கண்டுபிடித்தனர் இச்சடலத்தின் பிரேத பரிசோதனையை அச்சுவேலி ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரி திரு செகராசசிங்கம் நடாத்திஞர். வைத்திய அதிகாரியின் அறிக்கையையடுத்துசடுதிமரணவிசாரணை அதிகாரி திரு எம். உலகநாதன் இம் மரணம்குறித்து விசாரணைசெய்து நீரில் மூச்சுத்திணறி விபத்து மரணம் சம்பவித்துள்ளதாக தீர்ப்பு வழங்கிஞர். கிராமசேவையாளரிடம் சடலம் கையளிக்கப்பட்டு அரசாங்க செலவில் அடக்கம் செய்யப்பட்டது. )மல். நிரு)

வருவது தற்செ[illegible]ான தல்ல. இவர் சமாதானப் போராட்டம் பற்றியும் தனது தாயகம் பற்றியும் காதல் ப[illegible]றியும் கவிதைகள் ப[illegible]யுள்ளார். கபூர் குலியாம் கவிஞர் மட்டுமல்ல, இவர் பிரபல அறிஞருமாவார் சரித்திரம்இலக்கியம், கிராமியக் கலை ஆகியதுறைகளில் பாண்டித்தியம் மிக்கவர்.

இவர் இறந்த பின்னர் (1956-ல்இவர்மரணமாஞர்) வெளியிடப்பட்ட 'தொகுப்புரை', 'கவிதைகள்' நூல்களுக்காக லெனின்பரிசுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

நாம் எமது எதிர்கால சமுதாயத்திற்கு ஊட்டுவதுடன் கடந்த காலங்களில் எதிர்கால சமுதாயத்தின் சுதந்திரத்திற்காக பல புனித போராட்டங்களிலும் ஈடுபட்டிருந்தோம். சாவகச்சேரியிலிருந்து வாலிபர்கள் சகல வீதிகளாலும் சைக்கிளில் ஊர்வலமாகச்சென்று பொது கூட்ட மைதானத்தையடைந்தனர்.

செனட்டர் திரு. சு. நடராஜா, அட்வக்கேட் திரு. எம். ஆலாலசுந்தரம் ஜனுப் முத்துராஜா, திரு. எஸ். பீ. கணபதிப்பிள்ளை, திரு. து. இரதிகாந்தன் உட்பட பலர் உரை நிகழ்த்தினர்.

# திருக்கேதீஸ்வர யாத்திரிகர்க்கு விசேஷ ரயில் சேவை ஏற்பாடு

கோட்டை, செவ் இம்மாதம் 6ந் திகதி திருக்கேதீஸ்வர ஆலயத்தில் மகாசிவராத்திரி விசேஷமாகக் கொண்டாடப்படவிருக்கிறது. இதனையொட்டி இலங்கைப் புகையிரதப் பகுதியும், இ போ. ச வும் திருக்கேதீஸ்வர யாத்திரிகர்களின் பிரயாணத்துக்காக விசேஷ ஒழுங்குகளைச் செய்துள்ளன.

6ந் திகதி திருக்கேதீஸ்வர புகையிரத நிலையத்துக்கு நேரடியாகச் செல்லத்தக்க புகையிரத ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

6ந் திகதியன்று காங்கேசன்துறையிலிருந்து காலை 5-35 மணிக்கு ஒரு விசேஷ புகையிரதம் புறப்பட்டுப் பகல் 11-49 மணிக்கு திருக்கேதீஸ்வரத்தை வந்தடையும். இதே திகதியில் கொழும்புக் கோட்டையிலிருந்து காலை 5-45க்கு ஒரு விசேஷ புகையிரதம் புறப்பட்டுப் பகல் 11-49க்குத் திருக்கேதீஸ்வரத்தை அடையும். இவற்றிற் செல்லும் பிரயாணிகள் ஆலயத்துக்குச் செல்வதற்குத் திருக்கேதீஸ்வர புகையிரதநிலையத்திலிருந்து பஸ் சேவை ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன. இதைவிட இம்மாதம் 4, 5ந் திகதிகளில் வழமையாக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் செல்லும் புகையிரதங்களிலும் யாத்திரிகர்களுக்காக மேலதிக ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதோடு இப்புகையிரத சேவைகளுக்கும் திருக் கேதீஸ்வரத்திலிருந்து ஆலயத்துக்கு பஸ்சேவையும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.

யாத்திரிகர்களுக்கு இப்பிரயாணத்துக்கான வார இறுதிப் பிரயாணச்சீட்டுகள் 4ந் திகதி காலையிலிருந்து வழங்கப்படும்.

மேலும் யாத்திரிகர்கள் திருக் கேதீஸ்வரத்திலிருந்து திரும்புவதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 7ந் திகதி காலை 11 மணிக்கு திருக்கேதீஸ்வரத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கும், காலை 10 மணிக்கு கொழும்புக்கும் விசேஷ புகையிரத சேவை ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இதே திகதியில் பிற்பகல் 3-22க்கு மதவாச்சியில் உத்தரதேவி. யாழ் தேவியில் இணைக்கப்படும் பெட்டிகள் இணைக்கப்பட்ட புகையிரதமொன்றும் திருக் கேதீஸ்வர புகையிரதநிலையத்திலிருந்து புறப்படும்.

# 6 பிரேதங்கள் ஒன்ருக மயானத்துக்கு வந்தன

## வேலணையில் நெஞ்சை உருக்கும் காட்சி

வேலணை, செவ்வாய் பாலைதீவு படகு விபத்தில் பலியானவர்களின் 6 பிரதங்கள் நேற்று வலணை மயானத்திற்கு ஒன்றன் பின் ஒன்ருக கொண்டுவரப்பட்டன.

வேலணையில் ஒரே தினத்தில் ஆறு வீடுகளில் மரணச்சடங்குகள் நடைபெற்றது. மரணச்சடங்குகளில் கலந்து கொள்ள அங்குமிங்குமாக வீதி கொள்ளாது மக்கள் திரண்டிருந்தனர்.

மரணச்சடங்குகள் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம், வேலணையைச் சேர்ந்த சு. சுந்தரம் என்பவர் வெலிகாமத்தில் புகைவண்டியில் மோதுண்டு மரணமான தந்திச் செய்தி கிடைத்கது. இவரது சடலமும் வேலணைகுக் கொண்டுவரப்பட்டது.

படகு விபத்தில் உயிர் பிழைத்த வேலணையைச் சேர்ந்த து. பாலசுப்பிரமணியமும், மற்றும் இருவரும் தாங்கள் பட்ட இன்னல்களை விவரித்தனர். அவர்கள் வாயால் நடந்த சம்பவத்தைக் கேட்டறிந்த மக்கள் கதறி அழுதனர். வேலணைக் கிராமம் சோகமயமாகக் காட்சியளித்தது.

...றையும் அதன் மாலுமிகள் ஐவரையும்விடுவித்திருக்கின்றது. இக்கப்பல் மின்விசைக் கருவிகளைக்கொண்டு கடலில் ஆழ்ந்துபோன கப்பல் திரவியங்களைக்கண்டு பிடிப்பதில் ஈடுபட்டிருந்ததாம். இக்கப்பல் நடவடிக்கைகளுக்கும் அமெரிக்க அரசுக்கும் எதுவித சம்பந்தமுமே இல்லையென்று அமெரிக்க அதிகாரி ஒருவர் கூறினுர்.

—

## வெடிவிபத்து ஏராளமானேர் பலியாகினர்

லாவோஸ், மார்ச்3 பொலிவியா தலைநகரில் ராணுவமுகாமொன்றில் ஏற்பட்ட வெடிவிபத்துக்களில் ஏராளமானவர்கள் கொல்லப்பட்டதாகக் கருதப்படுகின்றது. பல சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. ஒருமணி நேரமாக இங்கு குண்டுகள் வெடித்ததாகவும் இதற்கு நாசவேலை காரணமாய் இருககலாமென்றும் அஞ்சப்படுகின்றது.

— —

## கண்டனத் தீர்மானம்

உடுவில், செவ்வாய் ''சென்ற உள்ளூராட்சி வாரத்தின்போது சபைக்கு வேண்டிய தகைமைகளான நிதி, நிர்வாகம், செயல், திறமைகள் இருந்தும், உள்ளூராட்சி வார நிகழ்ச்சிகள் முதலியவற்றைச்சிறப்புடன் செய்தும், நிதி நிலைமை நிர்வாகத் திறமை என்பன தொடர்ந்து பல ஆண்டு காலமாகத் திருப்திகரமாக இருப்பதாக கணக்காய்வு உத்தியோகத்தர்களால் கணிக்கப்பட்டு வரும் எமது சபை, உள்ளூராட்சி வாரத்தின்போது உள்ளூராட்சி வார பரிசிலனைக் குழுவினரால் பரிசீலிக்கப்படவில்லை. இச்செயலால் நிர்வாகத் திறமையுள்ள கிராமச்சபைகளுக்கு உள்ளூராட்சி அமைச்சின் யாழ். மாவட்ட நிர்வாகிகள் சோர்வுமனப்பான்மை ஏற்படுத்தியிருக்கின்ருர்கள். இதனுல் வருங்காலத்தில் உள்ளூராட்சி வாரத்தைக் கிராமசபைகள் கொண்டாடப் பின்நிற்கும் சூழ்நிலை உருவாக்கப் பட்டுள்ளது.''

உள்ளூராட்சி வாரத்தின் இறுதியில் சிறந்த கிராமசபைகள் தேர்வில் உடுவில் கிராமசபை புறக்கணிக்கப்பட்டது சம்பந்தமான மேற்படி கிராமசபை நிறைவேற்றியுள்ள கண்டனத் தீர்மானத்தில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

வழக்கில். சாட்சியமளித்த மட்டுவில் வடக்கைச் சேர்ந்த எஸ். சிதம்பரப்பிள்ளை மேற்கண்டவாறு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு' கே. விக்னராசா முன்னிலையில் தனது சாட்சியத்தின் போது கூறினுர்.

இந்த வழக்கில் மட்டுவில் வடக்கைச் சேர்ந்த சின்னன் குஞ்சுத்தம்பி கணபதி சுப்பையா, முருகன் சின்னையா கணபதி கந்தையா, ஆறுமுகம்செல்வராசா, சின்னத்தம்பி செல்வராசா, பொன்னு சின்னையா ஆகிய 7பேர்மீது மட்டுவில் வடக்கைச்சேர்ந்த சிதம்பரப்பிள்ளை. நடராசக் ஆகிய இருவரையும் தாாக்கியப்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சிதம்பரப்பிள்ளை தொடர்ந்து தனது சாட்சியத்தில் கூறியதாவது!-

சம்பவ தினமிரவு நானும் நடராசாவும் மட்டுவில் வடக்கில் சாத்திரம் பார்க்கப் போயிருந்தோம் அப்பொழுது ஏதோ பேச்சுவாக்கில் மாவிட்டபுரம் ஆலயப் பிரவேசம் பற்றி பேச்சை எடுத்து சர்ச்சை செய்து கொண்டோம். அப்பொழுது வெளியில் யாரோ ஆர்ப்பாட்டம் செய்வது கேட்டது.

வீட்டுக்காரர் வெளியில் சென்று பார்த்தார் பின் எங்கள்இருவரையும்அடுத்த வீட்டில் சென்று மறைத்து வைததார். பின்னர் நடராசா வெளியில் சென்ருர். சிறிதுநேரத்தில் குளறும் சத்தம்கேட்டது. நான் வெளியில் சென்று பார்த்த போது அவர் தாக்கப்பட்டுக் கொண்டிருந்தார்.

மேல் விசாரணை மார்ச் மாதம் 23ம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது.

—

## நேரில்சென்று பார்வையிட்டனர்

உடுப்பிட்டி, செவ் கரவெட்டி மேற்கு 'கன்பொல்லை' என்னும்இடத்தில் இரு பகுதியினருக்கிடையில் நடைபெற்ற கலவரங்களைத் தொடர்ந்து இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சிப் பொதுச் செயலாளர் திரு, எம். சண்முகதாஸும், கோஷ்டியினரும் சம்பவ இடங்களைப் பார்வையிட்டனர்.

கன்பொல்லையில் வெடிகுண்டு விபத்தில் மாண்ட மூவரின் இல்லங்களுக்கும் சென்று அனுதாபம் தெரிவித்த இக் கோஷ்டியினர் தீண்டாமையை ஒழிப்பதில் உரிமைப் போராட்டத்திற்கான நமது முழு ஆதரவையும் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

ஏழைகளோடு நாமும் ஒன்றுபட்டு அவர்கள்மூலம் உலக சமுதாயத்துடன் ஐக்கியப்பட்டு அவர்களுக்கு செய்யும் கூலிவேலையை ஆண்டவனுக்கென்று செய்தோமானுல் அதைவிடச் சிறந்த பூஜை வேறில்லை. — மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் மாசிமாதம் 21-ந் திகதி (4-3-70)


## கச்சதீவு

கச்சதீவு அந்தோனியார்திருநாள் இன்று ஆரம்பமாகிறது. திருநாளுக்காக அங்கு செல்லும் யாத்திரீகர்கள் 8-ம் திகதி அதிகாலை அங்கு நடைபெறும் திருச்சொரூப சுற்றுப்பிரகாரம் முடிவடைந்ததும் அங்கிருந்து புறப்பட்டுவிடவேண்டும். இதேசமயம் சமீபத்தில் நடந்த பாலைதீவுப் படகு விபத்தின் எதிரொலியாக அரசாங்கம் சில கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. பிரயாணிகளை ஏற்றிச் செல்வதற்கு 'லைசன்ஸ்' பெற்றிருக்கும் படகுகள்தான் கச்சதீவுக்குப் பிரயாணிகளை ஏற்றிச்செல்ல அனுமதிக்கப்படும் என்று யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் அறிவித்திருக்கிறார். பிரயாணிகளின் — பொதுமக்களின் — உயிரையும் உடமைகளையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு இருக்கிறது. இந்த வகையில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் சில நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பது நியாயமே.

கச்சதீவு இலங்கைக்குச் சொந்தமா, இந்தியாவுக்குச் சொந்தமா? என்ற பிரச்னைக்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை. எனவே அங்கு செல்வதற்கு இலங்கையிலுள்ளவர்களுக்கும் இந்தியாவிலுள்ளவர்களுக்கும் உரிமை இருக்கிறது. இது தவிர யாத்திரை செய்வது மனிதனின் அடிப்படை உரிமைகளுள் ஒன்று. கச்சதீவு யாத்திரைக்கு என்னதான் காரணம் கற்பித்தாலும் யாத்திரைசெய்யும் உரிமையைத் தடுப்பது நியாயமாகாது. ஆனாலும் சில தினங்களுக்கு முன்னர்தான் பாலைதீவுக்கடலில் படகு கவிழ்ந்து குழந்தைகள், இளைஞர்கள், ஆண்கள், பெண்கள் என பலர் கடலுக்குப் பலியான பயங்கரச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. பாலைதீவுக் கடலைவிட கச்சதீவுக்கடல் பயங்கரமானது.

பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு கச்சதீவுக்குச் செல்ல அனுமதிக்கப்படமாட்டாதென்றும் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் அறிவித்திருக்கிறார். படகுச் சட்டவிதிகள் கண்டிப்பாக அமுல்நடத்தப்படுமென்றும் அவர் கூறுகிறார். பாலைதீவு விபத்தில் சிக்கிய படகு மீன்பிடிப்படகு என்பதும் அந்தப் படகில் அளவுக்கதிகமான பிரயாணிகள் சென்றதும்தான் அரசாங்க அதிபரின் இந்த நடவடிக்கைக்குக் காரணமாகும்.

யாழ்ப்பாணப் பகுதியில் பிரயாணிகளை ஏற்றிச்செல்லக்கூடிய படகுகள் குறைவு. இவற்றிலும் 'லைசன்ஸ்' பெற்ற படகுகள் மிகக் குறைவு. இதிலும் இந்த வருடத்துக்கான 'லைசன்ஸ்' புதுப்பிக்கப்பெற்ற படகுகள் இதுவரை இரண்டே இரண்டுதானும். யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள ஒன்பது துறைகளிலிருந்துதான் கச்சதீவுக்கு யாத்திரிகர்கள் செல்லமுடியுமென்பதும் புறப்பட்டுச் சென்ற படகிலேயே அவர்கள் அதே துறைக்கு வந்து சேரவேண்டுமென்பதும் முன்னைய உத்தரவு. இரண்டு படகுகள்தான் பிரயாணிகளை ஏற்றிச் செல்வதற்கு 'லைசன்ஸ்' பெற்றிருப்பதானுல் ஒன்பது துறைகளிலிருந்தும் பிரயாணிகள் கச்சதீவுக்கு எப்படிப் போய்ச் சேரமுடியும்?

மக்களின் யாத்திரை உரிமையைப் பறிக்காமலும், யாத்திரைக்காக அவர்கள் செய்துள்ள ஏற்பாடுகள் குறைந்து ஏமாற்றமும் மனக்கசப்பும் அடையாமலும், பிரயாணத்துக்குத் தகுதியான படகுகளுக்கும், 'லைசன்ஸ்' காலாவதியான படகுகள் 'லைசன்ஸ்களை' புதுப்பித்துக்கொள்ளவும் துரிதமான ஏற்பாடுகளைச் செய்து ஏற்ற ஒழுங்குகளை மேற்கொள்வதும் அரசாங்கத்தின் கடமையும் பொறுப்புமாகும்.

இதேசமயம் உயிரைக்

## விசேஷ அபிஷேகம்

யாழ்ப்பாணம், புதன்

குரும்பசிட்டி அம்பாள் ஆலயத்தில் சிவராத்திரி தினத்தை முன்னிட்டு நான்கு கால ஜாமப் பூசையும், விசேஷ அபிஷேக ஆராதனை, தீர்த்தோற்சவமும் நடைபெறவிருக்கிறது.

சங்கீதபூஷணம் திருமதி மாது சிரோன்மணி, பாரதா-சாரதா சகோதரிகள் ஆகியோரின் இன்னிசை, மற்றும் மேளக்கச்சேரி, மெல்லிசை போன்ற நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (மல். நிரு)

## பேராதனை குறிஞ்சிகுமரனுக்கு பாராட்டு

பேராதனை, செவ்வாய்

''திருவில்லாத நகராயிருந்த பேராதனையைத் திருவுடை நகராக்கும் நோக்கத்துடனேயே இந்து மாணவர் சங்கத்தினரால் இந்தக் குறிஞ்சிக்குமரன் கோவில் அமைக்கப்பட்டது.''

இவ்வாறு கடந்த வெள்ளிக்கிழமை பேராதனைப் பல்கலைக்கழகக் குறிஞ்சிக்குமரன் கோவிலில் நடந்த விழாவில் உரையாற்றிய முன்னுள் பல்கலைக்கழக இந்துமாணவர் சங்கத் தலைவர் திரு. து அப்புலிங்கம் குறிப்பிட்டார்.

இன்றும் நாளையும்

## நல்லூர் வட்டார பாடசாலைகள் விளையாட்டுப்போட்டி

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானத்தில் இன்றும், நாளையும் நல்லூர் வட்டார கனிஷ்ட பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டி நடைபெறவிருக்கிறது. சுமார் 26 பாடசாலைகள் பங்கு பற்றும் இப்போட்டிக்கு யாழ்ப்பாண பிரதம கல்வியதிகாரி திருமதி ஆர். எஸ். பாமர் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். விழா ஒழுங்குகளை திரு. சின்னராசா கவனித்து வருகின்றூர். (மல். நிரு.)

## மகாசிவராத்திரி விழா

நாவலப்பிட்டி, புதன்

நாவலப்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானத்தில் மகா சிவராத்திரிவிழா ஆத்மஜோதி நிலையத்தாரால் சிறப்பாகக் கொண்டாடப்படும்.

இவ்விழா நான்குஜாமப் பூசையும் விசேஷ நிகழ்ச்சி

### இன்று கொடியேற்றம்

# அற்புதங்கள் செய்த வண்ணை வைத்தீஸ்வரன்

அற்புதங்கள் செய்த வண்ணை வைத்தீஸ்வர ஆலயத்தில் மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. சிவதர்மம் ஓங்க, ஆன்ருேர் தேவஸ்தானங்களை கிராமங்தோறும் மூலமுடுக்கெல்லாம் நிறுவினர். இதே போன்று நிறுவப்பட்டு, சிவதர்மம் ஓங்கிச் சிறப்புற மக்களுக்கு வழிவகுத்த புராதன சிவாலயங்களுள் வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானமும் ஒன்று. 1784ம் ஆண்டு அமைக்கப்பட்டது இந்தத் தேவஸ்தானம்.

நல்லைநகர் ஸ்ரீ ல ஸ்ரீ ஆறுமுகநாவலர் தமது இளம் பிராயத்தில் இங்குவழிபட்டு நற்பயன் எய்திஞர் அவர் தமது முதற் பிரசங்கத்தை இவ்விடத்திலேயே ஆரம்பித்தார் என்பதுகுறிப்பிடத்தக்கது.

இங்கு பல தடவைகளில் பல அற்புதங்கள் நடைபெற்று இருக்கிறன. இத்தேவஸ்தானத்தில் மூன்று சுற்றுப் பிரகாரங்களுண்டு. இங்கு தினமும் காலை 5 மணிக்குத் திருவனந்தலும் காலை 8 மணிக்கு காலசந்தியும் பகல் 12மணிக்கு உச்சிக்காலப் பூசையும், மாலை 6 மணிக்கு இரண்டாங்காலப் பூசையும் இரவு 7மணிக்கு அர்த்த ஜாமப் பூசையும் நிறைவேறுகின்றன.

வெள்ளி சனிவாரங்களில் உச்சிக்காலப் பூசை பகல் 12.30 மணிக்கு நிறைவேறுகின்றன. மகோற்சவ காலங்களில் பூசைநேரங்களில் மாற்றமுண்டு. இத் வேஸ்தானத்தில் வெள்ளிக் கிழமைகளில் அம்மன் திருவிழாவும் மாதம் இருமுறை பிரதோஷத் திருவிழாவும் மாதாந்த கார்த்திகை உற்சவமும் நிறைவேறுகின்றன.

வெள்ளிக்கிழமைகளில் பல பெரியார்கள் சமயப் பிரசங்கங்கள் செய்து நாவலர் பிரானின் பணியைக் கடைபிடிக்கின்றனர் இத்தேவஸ்தான பஜனைச் சபையினர் வெள்ளிக்கிழமைகளில் மும்முறை மூன்று சுற்றுப் பிரகாரங்களிலும் பஜனை செய்கின்றனர்.

சமய வளர்ச்சியில் முதன்மை வாய்ந்த இத் தேவஸ்தானத்தில் இரு மகோற்சவங்கள் நிறைவேறுகின்றன. இவற்றுள் சிவன் மகோற்சவம் இன்று ஆரம்பமாகி 23 நாட்களுக்குத் தொடர் நிறைவேறும். பகல் உற்சவம் காலை 8மணிக்கும் இரவு உற்சவம் 8-30 மணிககும் நிறைவேறும்.

இம் மகோற்சவ காலங்களில் தினமும் மாலை 6 மணி முதல் 7:30 மணிவரை கதாப்பிரசங்கமும் இரவு 8 30 முதல்9 30வரை சங்கீதக் கச்சேரிகளும் நிறைவேறத் திருவருள் பாலித்திருக்கின்றது.

— அவனடியான்

# "உள்ளூராட்சி அபிவிருத்திக்கு தனிவங்கி நிறுவவேண்டும்"

யாழ்ப்பாணம், புதன்

''கூட்டுறவுத்துறை வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கும் கூட்டுறவு வங்கிகள் போன்று உள்ளூராட்சி மன்றங்களால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தற்போது அரசாங்கம் உள்ளூராட்சிக் கடன் அபிவிருத்திச்சபை மூலம் வழங்கும் மானியம், நன்கொடை, கடன்களை உள்ளூராட்சி மன்றங்களுக்கெனத் தனியே வங்கி ஒன்று நிறுவி, ஒருமுகப்படுத்தி வைத்தல்வேண்டும். இதற்கான நடவடிக்கைகளை உள்ளூராட்சி அமைச்சர் அவசியம் எடுத்தல்வேண்டும்.''

மல்லாகம் கிராமசபைத் தலைவர் திரு. வ. பொன்னம்பலம், கந்தரோடை வட்டு[illegible]கை அம்மன் ஆலயத் திறந்தவெளியில் திங்கள் இரவு நடைபெற்ற கூட்டமொன்றில் [illegible] போது [illegible] குறி[illegible]ட்டார். உப தபால் நிலைய அதிபர் திரு. கி.

மத்திய அரசாங்கத்தை எதிர்பார்த்திருக்கும் நிலை மாறவேண்டும். தற்போது அறவிடும் சில வரிகளை, வருமானம் உள்ளூராட்சி மன்றங்களுக்கு அதிகரிக்க மத்திய அரசு இவைகளிடம் கையளித்தல் அவசியம். அந்நியர்களால் நமது நாட்டில் ஏற்படுத்தப்பட்ட கச்சேரி நிர்வாக அமைப்பு முறை மாற்றம்பெற்று மக்களால் தெரிவுசெய்யப்பட்டோரால் ஒவ்வொரு மாவட்டமும் நிர்வகிக்கப்படல்வேண்டும். மாவட்ட ரீதியில் மக்கள் கமிட்டிகளை உருவாக்கி என்ன பெயர் கொண்டு அழைத்தாலும் ஆட்சி, உண்மையான ஜனநாயகம் நாட்டில் நிலவ மக்களால் தெரிவுசெய்யப்பட்டோரால் நடாத்தப்[illegible] வேண்டும்

உடுவில் எம். பி. திரு வி. தருமலிங்கம் பேசுகை[illegible] [illegible]தல் காலங்களில் [illegible]யே நிலவும் போட்டி, பூசல்கள் தொடர்ந்தும் இருக்கக் கூடாது. சமூக, கிராம முன்னேற்றத்திற்கு இத்தகைய வேற்றுமைகள் இருத்தல் நல்லதல்ல ஆட்சிமன்ற உறுப்பினர்களாகக் கடமையாற்றுவதைவிட உள்ளூராட்சி மன்றத் தலைவர்களாக இருந்து மக்களுக்குப் பெரும் சேவை, தொண்டு புரியமுடியும்'' என்ருர்.

வழக்கறிஞர் திரு. ரி. தம்பிரத்தினம் பேசுகையில் சுன்னுகம் பட்டினசபைப் பகுதியில் குழாய் மூலம் குடிநீர் விநியோகஞ்செய்ய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்'' எனத் தெரிவித்தார்.

சுன்னுகம் பட்டினசபைத் தலைவர் திரு. பொ. நாகலிங்கம், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் திரு. பி. ஏகாம்பரம், திரு. வி சுப்பிரமணியம், வித்துவான் சி. ஆறுமுகம் ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர். (மல்லா. நிரு)

## ஐயாறன் எழுதுவது..

கச்சதீவுக்குச்செல்லவேண்டுமென்று எனக்குக் கூட ஓர் ஆசை. கடலில்சில மைல் தூரம் படகில் யாத்திரை செய்ய யாருக்குத்தான் விருப்பமிருக்காது? அதுவும் வருடத்திலே ஒருநாள். 8-ந் திகதிக்குப் பின் அங்கே ஒருவரும் இருக்கப்படாதென்று நமது இலங்கைக் காவலர்கள் விரட்டிவிடுவார்களாம்!

ஆனுல் நேற்றுக் காலை அரசாங்க அதிபர் ரெலிபோனில் கூறிய ஒரு செய்தி என் ஆசைமீது இடிவிழுந்தது போலிருந்தது. எனக்கு மட்டுமல்ல. கச்சதீவுக்குச் செல்ல மாதக்கணக்காக ஏற்பாடுகள் செய்துவரும் பல்லாயிரக் கணக்கானவர்களுக்கும் அப்படித்தானிருக்கும்.

பாலைதீவு படகு விபத்து ஏற்பட்டபின், தாம் அதிக கண்டிப்பாக இருக்கவேண்டியிருப்பதாயும், பிரயாணிகளை ஏற்றிச்செல்ல லைசென்ஸ் பெற்ற படகுகளில் மட்டுமே கச்சதீவு யாத்திரிகர் செல்லமுடியுமென்றும் அதுவும் லைசென்ஸ் பெற்ற தண்டல்கள்தான் அதை ஓட்டிச்செல்ல முடியுமென்றும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலேமொத்தம் 50 படகுகள்தான் பிரயாணிகளை ஏற்றிச்செல்ல லைசென்ஸ் பெற்றுள்ளனவாம். அதில் இவ்வருடத்துக்கான லைசென்ஸ் புதுப்பிக்கப்பெற்ற படகுகள் இரண்டுதான். சட்டப்படி பார்த்தால், அவ்விருபடகுகளில்தான் கச்சதீவு யாத்திரிகர் பிரயாணம் செய்ய முடியும்!

கடல் யாத்திரைக்கு படகுகள் தகுதியுள்ளனவா என்பதைப் பரிசோதனை செய்த பின்பே, லைசென்ஸை புதுப்பிக்கமுடியுமாம். அவசர அவசரமாகப் பலர் தங்கள் படகுகளின் லைசென்ஸைப் புதுப்பிக்க முயலுகின்றனர். ஆனுல் இரண்டொருநாளைக்குள் அது முடியுமா? கொழும்பிலிருந்து விசேஷ பரிசோதகர்களை வரும்படி அவசரமாகக் கேட்டுள்ளாராம் அரசாங்க அதிபர். ஆனுல் அவர்கள் அவசரமாக வந்து படகுகளைப் பரிசோதித்து. லைசென்ஸைப் புதுப்பிப்பார்களா என்று உறுதியாகக் கூறுவதற்கில்லை.

பரிசோதிக்காமல் லைசென்ஸைப் புதுப்பித்து, ஏதாவது அசம்பாவிதம்ஏற்பட்டுவிட்டால், அதற்கு யார் பொறுப்பு என்று அதிபர் கவலைப்பட்டு, தாம் பொதுமக்களின் உயிரைக் காக்க, இவ்விஷயத்தில் அதிக கண்டிப்பாக இருக்கவேண்டியுள்ளதாகவும் விளககிஞர்,

0 0 0

இதைப்பற்றி யாழ்ப்பாண பிஷப் ஆண்டகை காரியாலயத்தில் விசாரித்தேன். கச்சதீவு விழாவில் தாங்கள் இப்போது சம்பந்தப்படுவதில்லை என்றும், பாலைதீவுதிருவிழா கழித்த அடுத்தவாரம் கச்சதீவு விழா நடப்பது வழக்கமென்ற முறையில்தான் பொதுமக்கள் இருநாடுகளிலிருந்தும் அங்கு சென்று வழிபடுவதாகவும் தெரிய வந்தது.

இருநாடுகளுக்குமிடையே யாத்திரைக் கெடுபிடித் தடைகள் ஏற்படடபின், இருநாடுகளுக்கும் பொதுவானதாக இருந்துவரும் கச்சதீவுதான், பிரிந்து கிடக்கும் மக்கள் சந்திக்குமிடம் என்பது பகிரங்க ரகசியம்.

இந்த விழா எப்போது வருமென்று மாதக் கணக்காக ஆவலுடன் காத்திருந்தவர்களுக்கு, இம்முறை பெரும் ஏமாற்றமாக இருக்குமென்பதில் ஐயமில்லை.

இந்தத் திருவிழாவை அடுத்த மாதத்துக்கு ஒத்திவைத்து, அதற்கிடையே, இங்கு அதிக படகுகளுக்கு லைசென்ஸைப் புதுப்பிக்க முடியாதா என்று விசாரித்தபோதுதான் பிஷப் காரியாலயத்தார், தங்களுக்கு இதில் சம்பந்தமில்லை என்று தெரிவித்தனர். இதற்கிடையே இவ்விழாவை முன்னிட்டு இன்றே தமிழகத்திலிருந்து அங்கு வரும் ஏராளமானவர்களுக்கும் எப்படி இருக்கும்?

கச்சதீவு அங்குள்ள அந்

## புதிய அமெரிக்க தூதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிழ்ந்து குழந்தைகள், இளைஞர்கள். ஆண்கள், பெண்கள் என பலர் கடலுக்குப் பலியான பயங்கரச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. பாலைதீவுக் கடலைவிட கச்ச தீவுக்கடல் பயங்கரமானது. எனவே பாலைதீவுச் சம்பவத்தை ஒரு படிப்பினையாகக் கொண்டு இனியும் நிகழாதவாறு முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவது அவசியமே!

பிரயாணிகளை ஏற்றிச் செல்வதற்கு 'லைசன்ஸ்' பெருத படகுகளில் பிரயாணிகளை ஏறவேண்டாமென்றும் இந்தப் படகுகள் புதுப்பித்துக்கொள்ளவும் துரிதமான ஏற்பாடுகளைச் செய்து ஏற்ற ஒழுங்குகளை மேற்கொள்வதும் அரசாங்கத்தின் கடமையும் பொறுப்புமாகும்.

இதேசமயம் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதில் யாத்திரிகர்களுக்கும் பொறுப்பும் கடமையுமுண்டு. எனவே கச்சதீவு யாத்திரை சம்பந்தமாக அரசாங்க அதிபர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாத்திரிகர்களுக்குத் தற்காலிகமாக சில தடைகளை ஏற்படுத்திஞல் அதைப்பொறுத்துக்கொள்ள வேண்டியது தவிர்க்கமுடியாதது.

# பிரஜாவுரிமை மனு

இலங்கை-இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் பிரஜாவுரிமை கோரி மனுச்செய்யும் திகதி இவ்வருடம் ஏப்ரல் மாதம் 30-ந் திகதியுடன் முடிவடைகிறது. அதாவது இலங்கையில் வாழும் இந்தியவம்சாவழியினர் தாங்கள் இந்தியப் பிரஜைகளாக விரும்புகிருர்களா, இலங்கைப் பிரஜைகளாக விரும்புகிருர்களா என்பதைத் தீர்மானித்து மனுச்செய்துவிட வேண்டும். இதைத் தீர்மானிப்பதற்கு இரண்டு வருட அவகாசம் கொடுக்கப்பட்டிருந்தது உண்மையே. ஆனுலும் இந்தியப் பிரஜாவுரிமை கோருவதற்கும் இலங்கைப் பிரஜாவுரிமை கோருவதற்கும் தேவையான ஆதாரங்கள் அத்தாட்சிப் பத்திரங்கள் பெறுவதும், குறிப்பாக மலைநாட்டில் வசிக்கும் மக்கள் சமாதான நீதவான்களின் கையொப்பம் பெறுவதிலும் உள்ள கஷ்ட நஷ்டங்கள் கொஞ்சமல்ல. இவ்வித கஷ்டங்கள் பற்றி ஆட்சிமன்றத்தில் கூடப் பலரும் பிரஸ்தாபித்திருக்கின்றனர். எனவே பிரஜாவுரிமை கோரி மனுச்செய்யும் காலக்கெடுவை நீடிப்பதால் எதுவும் கெட்டுவிடும் என்று தோன்றவில்லை.

இலங்கை-இந்திய (சிறிமா-சாஸ்திரி) ஒப்பந்தப்படி இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினரில் ஐந்தேகால் லட்சம் பேர் இந்தியப் பிரஜாவுரிமைபெற்று இந்தியாவுக்குச்செல்ல வேண்டும்; மூன்றரை லட்சம்பேர் இலங்கைப் பிரஜாவுரிமை பெற்று இலங்கையிலிருக்கவேண்டும். இதிலும் 7 இந்தியப் பிரஜைகளுக்கு 4 இலங்கைப் பிரஜைகள் என்று விகிதாசார முறைகொண்டுவரப்பட்டுள்ளது. இந்தியப் பிரஜாவுரிமை பெற்ருலும் இந்தியாவுக்கு 7 பேர் சென்ருல்தான் இங்கு 4 பேருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்படுமாம். இது ஒருபுறமிருக்க இலங்கையிலிருந்துஐநதே கால்லட்சம்பேர் இந்தியாவுக்குச் செல்வதும் மூன்றரை லட்சம்பேர் இலங்கைப் பிரஜைகளாவதும் பதினைந்து வருடங்களுக்குள் நிறைவேறவேண்டும் என்பது 1964-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கைச்சாத்தான ஒப்பந்தத்திலுள்ள ஓர் அம்சம்: எனவே இதை நிறைவேற்றுவதற்கு இன்னும் பல வருடங்களிருக்கின்றன. இலங்கைப் பிரஜைகளாளுலும் கூட, இங்கு பதிவுப் பிரஜைகள் என்று புதியதோர் இனம் சிருஷ்டிக்கப் பட்டுவருவதால் இலங்கைப் பிரஜைகளாக விரும்புபவர்கள்கூட சில சமயம் மனம்மாறக் கூடும்.

எனவே ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் போன்ற தோட்டத் தொழிலாளர்களான இந்திய வம்சாவழியினரில் பெரும்பான்மையானவருக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கும் தொழிற்சங்கங்களின் கோரிக்கைக்குச் செவிசாய்த்து, பிரஜாவுரிமைக்கு மனுச்செய்யும் காலக்கெடுவை நீடிப்பது பலவிதத்திலும் நல்லது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு மார்ச் மாதம் 4-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

மாரி அம்பாள் தேவஸ்தானத்தில் மகா சிவராத்திரிவிழா ஆத்மஜோதி நிலையத்தாரால் சிறப்பாகக் கொண்டாடப்படும்.

இவ்விழா நான்குஜாமப் பூசையும் விசேஷ நிகழ்ச்சிகளும் கொண்டதாய் அமையும். 1-ம் சாமப் பூசையை அடுத்து திரு அ. இராஜகோபால் தலைமையில் திரு எஸ். நடராசா, பண்டிதை த. பூங்கொடி ஆகியோரின் சொற்பொழிவுகள் நடைபெறும்; 2-ம் சாமப் பூசையை அடுத்து திரு சு. ஆனந்தக்குமாரசாமியின் தலைமையில் திரு க] இலங்கைநாயகம் பண்டிதர் செ. நடராசா ஆகியோரின் சொற்பொழிவுகள் இடம் பெறும். 3-ம் சாமப்பூசையையடுத்து திருமதி பொன்னம்மாள் கிருஷ்ணபிள்ளையின் தலைமையில் கவியரங்கும் பக்திப்பாடல்கள் இன்னிசையாவும் இடம்பெறும் 4-ம் சாமப் பூசையையடுத்து திரு பி.டி கிருஷ்ணசாமி தலைமையில் செல்வி நாகவள்ளியின்உரையும் செல்வி ஐ இந்திராணியின் பாட்டும் இடம்பெறும்

## சிவராத்திரி கவியரங்கம்

யாழ்ப்பாணம்,புதன்

கோப்பாய் வீரபத்திர சுவாமி கோவிலில் நடைபெறவுள்ள மகா சிவராத்திரி விழாவில் கோப்பாய் திருவருள் தவநெறிமன்ற சார்பில் 'எல்லாம் சிவமயமே' என்ற தலைப்பில் கவியரங்கம் முக்கியநிகழ்ச்சியாக இடம்பெறவிருக்கின்றது. கவிஞர்களான வீ கந்தவனம், காரை செ. சுந்தரம்பிள்ளை, வே, குமாரசாமி வே. ஐயாத்துரை ஆகியோர் கலந்து கொள்ளும் இக் கவியரங்கிற்கு கவிஞர் திரு. இநாகராஜன் தலைமை தாங்குவார்.

செல்லி ஜெகதா சாம்பசிவக் குருக்களின் கதாப்பிரசங்கம், திரு ஆர்'பி, ஹரன் சொற்பொழிவு கலைமணி சுபவடிவேலு குழுவின் வில்லிசையும் நடைபெறவிருக்கின்றன. (மல். நி)

## தமிழரசாங்க ஊழியர் யாத்திரை

வெள்ளவத்தை,செவ்

கொழும்பிலுள்ள தமிழ்அரசாங்க ஊழியர்கள் வரும் மகாசிவராத்திரியை முன்னிட்டுத் திருக்கேதீச்சர யாத்திரை செல்லவிருக்கின்றனர். சுமார் 70பேர் கொண்ட குழுவொன்று வெள்ளவத்தை இளைஞர் இயக்கத்தின் ஆதரவில்இப் பயணத்தை மேற்கொள்கிறது.

வட்டுக்கோட்டை அம்மன் ஆலயத் திறந்தவெளியில் திங்கள் இரவு நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். உப தபால் நிலைய அதிபர் திரு சி. கணேசலிங்கம் தலைமைவகித்தார்.

சுன்னாகம் பட்டினசபையின் உதவி முதல்வராகத் தெரிவுசெய்யப்பட்ட 5ம் வட்டார உறுப்பினர் திரு. மா. நடராசாவை பாராட்டி இக்கூட்டம் நடாத்தப்பட்டது.

திரு பொன்னம்பலம் மேலும் பேசியதாவது: உள்ளூராட்சிமன்றங்களின் அதிகாரங்கள் மேலும் அதிகரிக்கப்படவேண்டும். எல்லாத் தேவைகளுக்கும் இவை

## சிவராத்திரிவிழா

மயிலிட்டி, செவ்வாய்

மயிலிட்டி ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெறவிருக்கும் மகாசிவராத்திரி விழாவில் நான்கு சாமப் பூசையும், விசேஷ நிகழ்ச்சிகளு இடம் பெறும்.

1-ம் சாம சாயரட்ச பூசையைத் தொடர்ந்து வைத்தியகலாநிதி திரு. க. சிவஞானரத்தினத்தின் தலைமையில் பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம், பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோரின் சொற்பொழிவுகள் இடம் பெறும். 2-ம் சாம பூசையையடுத்து திரு. வைத்திலிங்கம் தலைமையில் திரு. க. பரஞ்சோதி, திரு. ம. ஆனந்தசிவஐயர் ஆகியோரின் சொற்பொழிவுகள் இடம்பெறும். 3-ம் சாம பூசையையடுத்து திரு. இ. சுந்தரலிங்கம் தலைமையில் திரு. நம. சிவப்பிரகாசம், திரு கா. துரை ஐயா ஆகியோரின் சொற்பொழிவுகள் இடம்பெறும், 4-ம் சாம பூசையையடுத்து திரு. த. சிவலிங்கம் கோஷ்டியினரின் கூட்டுப்பிரார்த்தனையும், பக்திப்பாடல்களும் இடம்பெறும்.

0 0 0

கொழும்பு,புதன்

வருகிற வெள்ளிக்கிழமை மகாசிவராத்திரி தினத்தையிட்டு கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் ஆச்சிரமத்தில் இரவு பூராவும் விசேட பூசைகளும்,பிரார்த்தனைகளும் நடைபெறும்:

இதையடுத்து 9-ந் திகதி திங்கட்கிழமை பகவான் இராமகிருஷ்ணபரமஹம்சரின் 135-வது பிறந்ததின விழா இதே ஆச்சிரமத்தில்கொண்டாடப்படும். பூசைகள், பஜனைகளுக்குப்பின் பிரசாதம் வழங்கப்படும்.

வேண்டும்

உடுவில் எம். பி. திரு. வி. தருமலிங்கம் பேசுகையில்: ''தேர்தல் காலங்களில் மக்களிடையே நிலவும் போட்டி, பூசல்கள்

ஏகாம்பரம், திரு. வி சுப்பிரமணியம், வித்துவான் சி. ஆறுமுகம் ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர். (மல்லா. நிரு)

# ''1956 லிருந்து தமிழினம் முன்னேற்றமடையவில்லை'

உடுப்பிட்டி, செவ்

''ஒரு நாடும், இனமும் ஆண்டு தோறும் வளர்ச்சியும் முன்னேற்றமும் அடைந்து வருவதுதான் உலக வழக்கம். ஆனுல் இலங்கையில் தமிழ் மக்களாகிய நாம் 1956-ம் ஆண்டிலிருந்து மொழி, இன, பொருளாதாரத் துறைகளில் முன்னேற்றம் அடைய வேண்டியதிற்குப் பதிலாக பின்தங்கிக் கொண்டே வருகின்ருேம்'

இவ்வாறு உபசபாநாயகரும், உடுப்பிட்டி எம். பியுமான திரு. மு. சிவசிதம்பரம் கம்பர் மலையில் 'கிராம நலசேவா சங்க'த்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. வைத்திலிங்கம் தம்பு தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது திரு. தம்பையா கடவுள் வணக்கம் நிகழ்த்திஞர். உப சபாநாயகர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், அதனுடன் கூட்டுச் சேர்ந்த கம்யூனிஸ்ட் கட்சிகளும் தமிழினத்திற்குப் பாதகமான திட்டங்களை நிறைவேற்ற முயல்கின்றன. 1965-ம் ஆண்டில் தமிழரசுக் கட்சியும், தமிழ் காங்கிரஸ் கட்சியும் தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகித்ததின் மூலம் வடமாகாணத்தில் பெரும் அபிவிருத்தி ஏற்பட்டு உள்ளது.

தொகுதிக்குச் செய்ய வேண்டிய முக்கிய கடமை சிறந்த வைத்தியசாலை அமைப்பதே என்ற இலட்சியம் வெற்றியடைந்துள்ளது இன்னும் இரண்டு வருடங்களுக்குள் மந்திகை அரசினர் ஆஸ்பத்திரி, யாழ் பெரியாஸ்பத்திரியின் தரத்திற்கு உயர்த்தப்பட்டுவிடும்.

நாட்டு விவசாயம், தொழில்துறை முன்னேற்றத்திற்கு மின்சாரம் அவசியம் எனது தொகுதியிலுள்ள 75 வீத கிராம மக்களிற்கு மின்சாரம் வழங்கப்படவிருக்கிறது. பொதுமக்களை இலகுவில் எவராலும் ஏமாற்றிவிட முடியாது.

திருவாளர்கள் வ. தங்கராசா, அ. சந்திரசேகரம் ஆகியோரும் பேசினர்

## தமிழிலும் எழுத அனுமதி

கொழும்பு,செவ்வாய்

தமிழில் வங்கியாளர் பயிற்சித் தேர்வு எழுதுவதற்கு வங்கியாளர் பயிற்சி நிலையம் தமிழ் வங்கி ஊழியர்களுக்கு அனுமதி அளித்துள்ளது.இப் பரீட்சை மேமாதம் நடைபெற விருக்கிறது.

மத்தியவங்கி தமிழ் ஊழியர் சங்கம் தமிழில் வங்கியாளர் பயிற்சித்தேர்வு குறித்து வங்கியாளர் பயிற்சி நிலையத்துடன் தொடர்பு கொண்டதை யொட்டியோ மேற்படி தேர்வு தமிழிலும் நடைபெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் அனுப்பும் திகதி பிற்போடப் படுமெனத் தெரிகிறது.

## ''விழிப்படையச் செய்யட்டும்''

வெள்ளவத்தை, செவ்.

''ஈழத்தின் சரித்திரத்திலேயே மிகவும் கோரமானதும், துக்ககரமானதுமான படகு விபத்து இதுவாகும். தமது நேர்த்திக் கடன்களை முடிப்பதற்காகப் பக்தியோடு சென்றுகொண்டிருந்த மக்களுக்கு இப்படியோர் அபாக்கியநிலை ஏற்பட்டிருக்கக்கூடாது. மீன்களைப் போன்று மனிதச் சடலங்கள் குவிக்கப்பட்ட காட்சியைப் பார்த்துக் கண்ணீர் வடித்தோம். இப்படிக் கோரமாகச் சாவதற்கு என்னதான் பாவம் செய்தார்களோ தெரியவில்லை''

இவ்வாறு வெள்ளவத்தை இளைஞர் இயக்கத்தின் விசேட பொதுக்கூட்டம் நடைபெற்றபோது கூட்ட ஆரம்பத்தில் பாலைதீவு படகு விபத்தில் மாண்டவர்களுக்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்திய பின் உரை நிகழ்த்திய திரு. கே. கந்த கதிர்காமநாதன் கூறிஞர்.

இந்தக் கோரச் சம்பவம் இனிமேலாவது யாழ்ப்பாணத்துப் படகுக்காரர்களையும், கடற்ருெழிலாளர்களையும் விழிப்படையச் செய்யட்டும் என்று அவர் தெரிவித்தார்.



டாக்டர் ரூபேட் ஸ்ரெஸ்ஸ் ஹீப் இலங்கையில் அமெரிக்கத்தூதராக பெப்ரவரி 17-ம்திகதி அமெரிக்க செனட் சபையினுல் நியமிக்கப்பட்டுள்ளார். இவர்மாலை தீவுக்கும் தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.

புகழ் பெற்ற அரசியல் ஞானியாகிய இவர் ஒரு சிறந்த எழுத்தாளரும், கல்விமானும், தத்துவஞானியுமாவர்.

1903-ம் ஆண்டு ஆஸ்த்திரியத்தலைநகரான வியன்னுவில்பிறந்தடாக்டர்ரூபேட் 1923-ம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்காவுக்கு வந்து அமெரிக்க பிரஜையானுர். இளமையிலேயே இவருக்கு அரசியலில் அதிக ஆர்வம் ஏற்பட்டது. அதன் பயனுக இவர் தனது 30-வதுவயதில் அரசியலைப் பற்றி எழுத ஆரம்பித்தார்,இப்படி அரசியல் பற்றியாவரும் மெச்சும்படி எழுதிக் கொண்டிருக்கும் வேளையிலே ஐரோப்பிய நாடுகள் பலவற்றிற்கும் சென்று அந்நாடுகளின் அரசிதல் பொருளாதார, சமூக நிலைமைகளை நன்ருக ஆராய்ந்து நூல்கள் எழுதிஞர். பிரான்சைப்பற்றிய நூலே அவர் முதல் எழுதிய நூலாகும். ஐரோபிய விவகாரங்கள் பற்றிச் சிறந்த கட்டுரைகளும் எழுதியுள்ளதோடு 'கறன்ட் ஹிஸ்ரரி' என்ற சஞ்சிகையின் உதவி ஆசிரியராகவும் கடமையாற்றிஞர். தனது சுயசரிதையையும் சுவை பட எழுதியுள்ளார்.

இதன் பின்னர் பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞான விரிவுரையாளராகவும் டாக்டர் ரூபேட் கடமையாற்றிஞர். விரிவுரையாளராகவிருக்கும் காலத்திலேயே எம் ஏ. டாக்டர் பட்டங்களுக்குப் படித்துப் பட்டம் பெற்று பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானப் பேராசிரியராக நியமனம் பெற்ருர்.

1968-ம்ஆண்டு ஜனுதிபதி தேர்தலின் போதுஜனுதிபதி நிக்சனின் வெளி விவகார ஆலோசனைக் குழுவின் ஒரு அங்கத்தவராக நியமிக்கப்பட்டார். தற்போது இந்த சிறந்த அரசியல் விஞ்ஞானியை. தத்துவஞானியை அமெரிக்க அரசாங்கம் இலங்கை, மாலைதீவு ஆகிய இரு நாடுகளுக்கும் தூதராக நியமித்துள்ளது

தெரிவித்தனர். இதற்கிடையே இவ்விழாவை முன்னிட்டு இன்றே தமிழகத்திலிருந்து அங்கு வரும் ஏராளமானவர்களுக்கும் எப்படி இருக்கும்?

கச்சதீவு அங்குள்ள அந்தோனியாருக்கே சொந்தம் என்று இப்பத்தியில் முன்னர் எழுதியிருந்தேன். அதை ஒப்புக்கொண்டால் உலகில் யாரும் அங்குவந்து வழிபடலாம். உலகில் எங்கு வேண்டுமாயினும் மக்கள் தடையின்றி முன்போல் யாத்திரை செய்யலாம். ஆனுல் குறுகிய தேசிய வாதங்கள் தலைதூக்கும் இக்காலத்தில் அந்த நிலை மீண்டும் ஏற்பட முடியுமா?

0 0 0

வானைக் கடந்தண்டத்தப்பான் மதிப்பன மந்திரிப்பார். ஊனைக் கழித்துய்யக் கொண்டருள் செய்வன வுத்தமர்க்கு, ஞானச்சுடராய் நடுவே உதிப்பன நங்கை அஞ்ச, ஆனை உரித்தன காண்க வையாறனடித் தலமே,

—அப்பர்அடிகள்

## ''பேரின்பத்தை அனுபவிப்பதே உயரிய லட்சியம்''

யாழ்ப்பாணம், புதன்

''மனிதன் தன் நெஞ்சமாகிய கோவிலில் இறைவனை எழுந்தருளச்செய்து ஆர்வமென்னும் புஷ் பாஞ்சலி செய்வானுகில் 'நாச்செற்றுவிக்குள்' வரும் மரணுவஸ்தையினுல் யமதூதனுக்கும் இவனது ஆத்மாவுக்கும் இடையில் நிகழும் போராட்டத்தில் வெற்றி நிச்சயமாக இவனுக்கென்பதுறுதி'' இவ்வாறு யாழ்ப்பாணம் தெய்வீக வாழ்க்கைச் சங்கமண்டபத்தில் ஓய்வு பெற்ற நீதிபதி திரு. தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற பிரார்த்தனைக்கூட்டத்தில் மலாயா தெய்வீக வாழ்க்கைச் சங்கத் தலைவர் சுவாமி பிரணபவானந்தர் தமதுரையில் குறிப்பிட்டார்

## செனட்சபை இலிகிதர்

கொழும்பு செவ்வாய்

இம்மாதம் 3-ந் திகதியிலிருந்து திரு. எல். எம். பீ. பீ. வீரசிங்கா செனட்சபையின் பிரதம இலிகிதராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் இலிகிதராகவிருந்த திரு பி.கொஸ்வத்தை சேவையிலிருந்து ஓய்வுபெற்றதைத் தொடர்ந்தே திரு. வீரசிங்கா நியமிக்கப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org